விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 ஆனி 29 வியாழக்கிழமை (13.07.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 206

ராம்கோ MADRAS CEMENTS LTD RAMCO CEMENT RAMCO

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.

ராம்கோ சீமெந்து

## செட்டித்தெரு வீதியில் கிளைமோர் தாக்குதல்

### 2 பொலிஸார் பலி; 6 பேர் படுகாயம்

நல்லூர் செட்டித் தெருவில் பொலிஸ் ஜீப் வண்டியை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட கிளைமோர்த்தாக்குதலில் இருவர் உயிரிழந்தனர்,ஆறு பேர் படுகாயமடைந்தனர். நேற்று பிற்பகல் 2மணியளவில் இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதில் இரு பொலிஸார் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

மேலும் ஆறு பொலிஸார் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்.பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த ஜெயசிங்க (வயது 41), தருந்த ஜெயசுந்தர , நிலந்த (வயது 35), சாந்த (வயது 32), றஞ்சித் (வயது 35) கருசன குமார (வயது 32) ஆகிய ஆறு பொலிஸாருமே காயமடைந்து யாழ்.போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

றோகன மற்றும் சண்முகராஜா ஆகிய இரு பொலிஸாருமே உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டது. (ச-133)

## இளைஞர்கள் இருவர் கைதாகி விடுதலை

(யாழ்ப்பாணம்)

நேற்றுக் காலை சத்திரச்சந்தியில் வைத்து இரு இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டனர்.

மாம்பழம் வாங்குவதற்காக யாழ்.நகர் சந்தைக்கு வரும் பொழுது கைதுசெய்யப்பட்டதாக யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் பெற்றோரால் முறைப்பாடு செய்யப்பட்டது.

கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஜெயரட்ணம் ஆதவன் (வயது 30), கதிர்காமர் சுதாகர் (வயது 19) ஆகிய இருவருமே கைதுசெய்யப்பட்டவர்களாவர்.

ஜெயரட்ணம் ஆதவன் குவைத்தில் இருந்து தற்போது யாழ்ப்பாணம் வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களது (10 ஆம் பக்கம் பார்க்க)

## வெடிகுண்டு நிரப்பிய மோ.சைக்கிள்கள் கொழும்பிற்குள் ஊடுருவலாம்!

(கொழும்பு)

முக்கிய அரசியல் பிரமுகர்கள் மற்றும் இராணுவ அதிகாரிகள் பயணிக்கும் வாகனங்கள் மீது தாக்குதல் நடத்துவதற்காக அதி சக்தி வாய்ந்த குண்டுகள் பொருத்தப்பட்ட எட்டு மோட்டார் சைக்கிள்கள் கொழும்புக்குள் கொண்டு செல்லப்பட்டுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அவ் எட்டு மோட்டார் சைக்கிள்கள் பற்றிய அனைத்து தகவல்களும் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்துள்ளன. தற்கொலை தாரிகளைப் பயன்படுத்தி முக்கிய அரசியல் பிரமுகர்கள் மற்றும் (10 ஆம் பக்கம் பார்க்க)

## இ.போ.ச.பணியாளர்களின் புறக்கணிப்பு நேற்று மாலையுடன் நிறைவடைந்தது

(துன்னாலை)

இலங்கை போக்குவரத்துச் சபை சாரதி, நடத்துநர்கள் வரணிப் பகுதியில் வைத்து இராணுவத்தினரால் தாக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று காலை முதல் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பணியாளர்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இதனால் வழமையான போக்குவரத்துக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டது. மக்கள், அரச ஊழியர்கள் அசௌகரியங்களை எதிர்நோக்கினர்.

இதேவேளை தாக்குதல் நடவடிக்கை காரணமாக தடைப்பட்ட பேருந்து சேவையை வழமை நிலைக்குக் கொண்டுவர தென்மராட்சிப்பிரதேச இராணுவப் பொறுப்பதிகாரி , பருத்தித்துறைசாலை (10 ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பை பாதுகாக்கவென ஆயிரம் பேரைக்கொண்ட குழு

## இராணுவப் பேச்சாளர் தகவல்

(கொழும்பு)

கொழும்பிலும் அதனை அண்மித்த பகுதிகளிலும் இடம் பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதலினைத் தொடர்ந்து கொழும்பு தலைநகரின் பாதுகாப்பினை உறுதிசெய்ய புதிதாக ஆயிரம் பேரை இராணுவத்தில் சேர்க்க அரசு முடிவு செய்திருக்கிறது.நேற்றைய தினம் ஆரம்பிக்கப்பட்ட இதற்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கை எதிர்வரும் 21 ஆம் திகதி வரை தொடரவுள்ளது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தயா மாஸ்டருக்கு கொழும்பில் சிகிச்சை

(கிளிநொச்சி)



விடுதலைப்புலிகளின் ஊடகப்பேச்சாளர் தயா மாஸ்டர் சுகவீனம் காரணமாக சிகிச்சைக்காக கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

இருதய கோளாறினால் பாதிக்கப்பட்டுள்ள அவர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன்; போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் வழித்துணையுடனும் ஓமந்தைச் சாவடியூடாக கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டதாக (10 ஆம் பக்கம் பார்க்க)

## நாகர் கோவிலில் நேற்று கடற்சமர்

வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் கடற்பரப்பில் கடற்படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடற்சமர் இடம் பெற்றுள்ளது.

இதன்போது கடற்படைச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளார். நேற்று அதிகாலை 2.45 மணியளவில் ஆரம்பித்த தாக்குதல் ஒரு மணி நேரமாக இடம் பெற்றதாக தெரியவருகிறது.

தாக்குதலில் இரு கடற்படையினர் படுகாயமடைந்துள்ளதாக தெரியவருகிறது. இதேவேளை நேற்று அதிகாலை தமது படகைத்தாக்க வந்த விடுதலைப்புலிகளின் படகு மீது கடற்படையினர் தாக்குதல் நடத்தியதாக கடற்படை வட்டாரங்கள் தெரிவித்தன. (ச-5)

## முன்னாள் புளொட் உறுப்பினர் மாட்டின் வீதியில் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

புளொட் அமைப்பின் முன்னாள் யாழ். மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

மாட்டின் வீதியில் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் அவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

மாட்டின் வீதியைச் சேர்ந்த போல்டன் இருதயராஜா (வயது 46) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார். இவர் நான்கு பிள்ளைகளின் தந்தையாவார்.

சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட யாழ்.மாவட்ட மேலதிக நீதிவான் சிறிநிதி நந்தசேகரன் பிரேதபரிசோதனைக்காக சடலத்தை யாழ்.போதனாவைத்



தியசாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (ச-15,133)

## உடுப்பிட்டியில் கிளைமோர்

(துன்னாலை)

உடுப்பிட்டி இராணுவ தலைமைக் காரியாலயத்திற்கு 50 மீற்றர் தூரத்தில் மரம் ஒன்றில் பொருத்தப்பட்டிருந்த அதி சக்தி வாய்ந்த கிளைமோர்க் குண்டு ஒன்று வெடித்ததில் சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இச் சம்பவம் நேற்றுக் காலை 8.40 மணியளவில் இடம் பெற்றது. வீதி ரோந்து நடவடிக்கையில் ஈடுபடும் இராணுவத்தினரைக் குறி வைத்தே இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இச் சம்பவத்தில் பிரியந்த பண்டார (வயது 29) என்ற சிப்பாயே காயமடைந்துள் ளார். காயமடைந்த சிப்பாயை மந்திகை வைத் தியசாலைக்குக் (10 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பிரிவினையைத் தவிர்ப்பதற்கு சிறந்த வழி இல்லையெனில்... தடுக்க முடியாது

நேற்றைய தொடர்ச்சி...

*ஆயுத இறக்குமதிக்கு தடைவிதிக்கப்படவில்லை*

யுத்த நிறுத்த ஒப்பந்த சரத்து 1.2 இன் கீழ் எந்த ஒரு தரப்பும் இராணுவ தாக்குதல் நடவடிக்கை மேற்கொள்ளக்கூடாது. அனைத்து வகையான இராணுவ நடவடிக்கைகளையுமே மேற்கொள்ளக் கூடாது என்று கூறியுள்ளது. நேரடியாக அல்லது மறைமுகமாக ஆயுதங்களால் சுடுதல், ஆயுத சோதனை, தாக்குதல்கள், படுகொலைகள், கடத்தல்கள், பொதுமக்கள் அல்லது இராணுவ சொத்துகளை நாசமாக்குதல், பாதிப்பு உருவாக்குதல் மற்றும் தற்கொலை நடவடிக்கைகள் ஆழ ஊடுருவும் அணியினரது நடவடிக்கைகள் என அதில் வகைப்படுத்தப்பட்டுள்ளது. ஆயுதங்களை இறக்குமதி செய்வது ஒரு இராணுவ ரீதியான தாக்குதல் நடவடிக்கை அல்ல. அதற்கு யுத்த நிறுத்த ஒப்பந்தம் தடையும் விதிக்கவில்லை. ஆயுதக் கொள்வனவைத் தடுப்பது ஒரு அரசாங்கத்தின் பொது நடவடிக்கை.

பொதுவில் இறுதியான அமைதி ஒப்பந்தம் உருவாக்கப்பட்டு; ஆயுதக்களைவு என்றெல்லாம் வருகின்ற போது இத்தகைய ஆயுதக் கொள்வனவுக்கு தடை விதிக்கப்படும் யுத்த நிறுத்த ஒப்பந்தம் தொடர்பான இராஜதந்திர பேச்சுக்களில் இது இடம்பெறும் கடல்சார் ஆயுத இறக்குமதி நடவடிக்கைகள் குறித்து சட்டங்களை பிரச்சினையில் தொடர்புபட்ட தரப்பினர் நன்கு அறிந்தே வைத்திருப்பர்.

தமிழீழ விடுதலைப்புலிகள்– ஒரு தேச விடுதலைப் போராட்ட இயக்கம். ஐ.நாசபையின் தீர்மாணங்கள் 3034 மற்றும் 3314 இன் கீழ் சுய நிர்ணய உரிமைக்காக தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆயுத இறக்குமதி செய்யும் உரிமை உண்டு. சர்வதேச சட்ட விதிகளின் படி சுய பாதுகாப்பு, சுய உதவி ஆகியவற்றுக்காக தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதங்களை இறக்குமதி செய்ய முடியும்.

*ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு என்பது சர்வதேச அணுகுமுறைக்கு முரண்*

தமிழீழ மக்களின் சுய நிர்ணய் உரிமைப் போராட்டத்தை 'சர்வதேச வலைப் பின்னலில்' சிக்க வைத்திருக்கிறோம் என்று சிறிலங்கா தலைவர்கள் கூறிவரும் போது அமைதி முயற்சிகளில் சர்வதேச சமூகத்தினது செயற்பாடுகளானது நடுநிலைத்தன்மையோடு இல்லை என்ற உணர்வை ஏற்படுத்தும். சிறிலங்காவின் இத்தகைய கருத்துகளைத் தடுக்கவும் மறுக்கவும் சர்வதேசசமூகம் தவறி விட்டது மேலும் இனப்பிரச்சினைக்கு ஐக்கிய இலங்கைக்குள் தீர்வுகாண வேண்டும் என்ற சர்வதேசசமூகமானது அழுத்தம் கொடுப்பது என்பது ஒரு மோசமான கருத்தாகும். அத்தகைய நிலைப்பாடானது சுயநிர்ணய உரிமைச் சட்டங்களுக்கு எதிரானது.

மேலும் உலகம் முழுமைக்கும் தற்போது நடைபெற்று வருகின்ற தேசிய இனப்பிரச்சினைகளில் சர்வதேசசமூகம்கடைப்பிடித்துவரும் அணுகுமுறைகளுக்கும் முரணானது அது. தென் சூடான் பிரச்சினையில் மாக்கோஸ் ஒப்பந்தத்தின் கீழ் அமெரிக்காவின் அனுசரணையுடன் இங்கிலாந்து, நோர்வே மற்றும் இத்தாலி ஆகிய நாடுகள் தென் சூடான் மக்கள் தனியரசு அமைப்பதை அங்கீகரித்துள்ளன. தென் சூடான் மக்கள் 6 ஆண்டுகளுக்குப் பின்னர் சூடானுடன் இருப்பதா அல்லது தனியரசை அமைப்பதா என்பது குறித்து வாக்கெடுப்பு நடத்தவும் இந்த ஒப்பந்தம் வழி செய்துள்ளது.

அதேபோல புனிதவெள்ளி ஒப்பந்தத்தின் கீழ் வட அயர்லாந்து தனது அரசியல் எதிர்காலத்தை தீர்மானிக்கும் உரிமை அளிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு 7 ஆண்டுகளுக்குப் பின்னரும் வட அயர்லாந்தில் வாக்கெடுப்புநடத்தஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. இதேவகையில் தான் சேர்பிய–மொண்டே நீக்ரோ ஒப்பந்தமும் மொண்டே நீக்ரோ மக்கள் தனியரசு அமைக்க ஒப்புதல் அளித்துள்ளது. மூன்று ஆண்டு காலத்துக்குப் பின்னர் வாக்கெடுப்பு நடத்தவும் வகை செய்துள்ளது.

பாப்புவ நியூ கினியா–பௌகன் வில்லெ ஒப்பந்தத்தின் கீழ் பௌகன் வில்லெ 10 அல்லது 15 ஆண்டுகளுக்குள் வாக்கெடுப்பு நடத்தி அந்நாட்டு மக்களின் அரசியல் அபிலாசைகளை அறிந்து கொள்ளலாம். தென்சூடான், வட அயர்லாந்து, மொண்டேநீக்ரோ; பௌகன்வில்லெ ஆகியவை காலனித்துவத்தின் எஞ்சியவை அல்ல. இவை அனைத்துமே காலனித்துவமற்ற நாடுகளின் பிரச்சினை.

தென் சூடானின் மாக்கோஸ் ஒப்பந்தத்தை சர்வதேச சமூகம் உருவாக்கும்போது ஐக்கிய இராச்சியத்தின் (இங்கிலாந்து) இறையாண்மை அல்லது பிரதேச ஒருமைப்பாட்டை மீறுவதாகக் கூறி எதிர்க்கவில்லை. சேர்பியா–மொண்டோ நீக்கிரோ ஒப்பந்தத்தை உருவாக்கும் போது சேர்பியாவின் பிரதேச ஒற்றுமையை மீறுவதாகக் கூறி எதிர்க்கவில்லை.

பாப்புவ நியூ கினியா– பௌகள வில்லே ஒப்பந்தத்தை உருவாக்கும் போது பாப்புவ நியூ கினியாவின் இறையாண்மையையும் பிரதேச ஒற்றுமையையும் மீறுவதாகக் கூறி எதிர்க்கவில்லை.

மேற்கூறிய இனப்பிரச்சினைகளின் போது தலையிட்ட சர்வதேச சமூகம் என்ன் வகையான அமைதித் தீர்வு உருவாக்கப்படவேண்டும் என்று அந்த அளவு கோலையும் முன்னரே வைத்திருக்கவில்லை. அண்மையில் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் கொபி அனான், கொசாவோவானது சேர்பியாவுடன் இருக்க வேண்டுமா அல்லது சுதந்திரம் அளிக்கப்பட வேண்டுமா என்பதற்கான நடவடிக்கைகள் விரைவில் தொடங்கப் படும் என்றார்.

இந்த இனப்பிரச்சினைகளில் எல்லாம் இத்தகைய நிலைப்பாட்டை மேற்கெண்டு சர்வதேசசமூகமானது இலங்கைத் தீவில் தமிழ்–சிங்கள இனங்களுக்கு இடையேயான பிரச்சினையில் மட்டும் ஐக்கிய நாடு என்ற கட்டமைப்பில் தான் தீர்வு உருவாக்கப்பட வேண்டும் என்று அழுத்தம் கொடுப்ப தானது சர்வதேச சமூகத்தின் இரட்டை நிலைப்பாட்டையே வெளிப்படுத்துகிறது.

இறையாண்மை குறித்த நிபந்தனைகளுடன் அமைதிப் பேச்சுக்களை நடத்தும்போதுதான் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வுக்கு சிங்கள தேசம் முன்வரும். அல்லது அமைதி முயற்சிகள் உரிய முறைகளில் முன்னெடுக்கப்படும். அதே நேரத்தில் தற்போதைய அமைதி முயற்சிகளுக்கு தமிழ் மக்கள் மீது நம்பிக்கையும் அதிகரிக்கும். அரெண்ட் லிப்கர் வாதிடுவதைப் போல், பிரிவினையைத் தவிர்ப்பதற்கு சிறந்த வழி இல்லையெனில் தடுக்க முடியாது.

## இராசி பலன்

**13.07.2006**
**(ஆனி 29, வியாழக்கிழமை)**
**திருதியை பின்னிரவு 3.28 மணிவரை**
**திருவோணம் முற்பகல் 10.54 மணிவரை**
**இராகுகாலம் 1.29–2.59மணிவரை**
**சுபநேரம் 7.29–8.59 மணிவரை**

| | |
|---|---|
| மேடம் | சுபநகழ்வு, நல்லசெய்தி, எடுத்த காரியம், கைகூடும், போசனசுகம். |
| இடபம் | ஆன்றோர் ஆசி, வீண்பயம், முயற்சி தாமதம், உடல்உழைப்பு. |
| மிதுனம் | எதிர்பாராத அச்சம், உடல்நலக்குறைவு, வேலைச்சுமை, பணக்குறைவு. |
| கடகம் | அபூர்வசந்திப்பு, கௌரவமான நிலை, காரிய அனுகூலம், வாகனவசதி. |
| சிங்கம் | பணவருவாய், சுகவாழ்வு, திடீர்பயணம், சத்துருஜெயம். |
| கன்னி | காரிய இடையூறு, கௌரவக்குறைவு, புத்திரரால் கவலை, பணக்குறைவு. |
| துலாம் | பயந்த சுபாவம், அற்பர் உறவு, கல்வியில் ஆர்வம், ரோகநிலை. |
| விருச்சிகம் | கூட்டு முயற்சி, இனிய அனுபவம், வாக்கு மேன்மை, பொருள் சேர்க்கை. |
| தனுசு | மதிப்புக்குறைவு, காரிய தாமதம், பொருள் விரயம், திடீர் நன்மை. |
| மகரம் | பெரியோர் ஆசி, ஆழந்த சிந்தை, நல்ல முயற்சி, சயனசுகம். |
| கும்பம் | பிதாசிந்தை, பணவிரயம், சயனசுகக் குறைவு, முயற்சி தாமதம். |
| மீனம் | தொழல்சிந்தை, மனமகிழ்ச்சி, பொருள சேர்க்கை, நண்பர்கள் சந்திப்பு. |

- வளவன்

## இறுதிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்

(கொழும்பு)

இந்துசமய அறநெறிப் ப்ரடசாலை மாணவர்களுக்கான இறுதிப் பரீட்சைக்கு தகைமையுடைய மாணவர்களிடமிருந்து பரீட்சைத் திணைக்களம் விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

இப்பரீட்சை இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட இந்து அறநெறிப் பாடசாலைகளில் பயிலும் மேற்பிரிவு மாணவர்களுக்கானது. மேற்பிரிவில் 10 ஆம் தரம் சித்திபெற்று பதினொராம் தரத்தில் கல்வியை மேற்கொள்பவர்களும் ஏற்கனவே இப் பரீட்சையில் தோற்றி சித்தியெய்தாதவர்களும் இப்பரீட்சைக்குத் தோற்ற முடியும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் மாணவர்களை பரீட்சைக்கு அனுப்பி வைக்க சகல இந்து அறநெறிப்பாடசாலைகளுக்கும் போதுமான விண்ணப்பப் பத்திரங்களும் அறிவுறுத்தல்களும் தபால் மூலமாக அனுப்பி வைக்கப்படும்.

விண்ணப்பப் படிவங்கள் கிடைக்காத அல்லது 2005ஆம் ஆண்டில் பரீட்சைக்கு விண்ணப்பதாரிகளை அனுப்பாத இந்து அறநெறிப்பாடசாலையின் பெயர், முகவரி, தோற்றவுள்ள விண்ணப்பதாரிகளின் தொகை போன்ற விபரங்களை குறிப்பிட்டு பரீட்சைத் திணைக்களத்திற்கு இம்மாதம் 14ஆம் திகதிக்கு முன்னர் அனுப்ப வேண்டும் என பரீட்சைத் திணைக்கள ஆணையாளர் அனுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

அரச வர்த்தமானி இலக்கம் 1453இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளுக்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்ப படிவத்தை பூர்த்தி செய்து எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 4ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சை ஆணையாளர் நாயகம்த ஒழுங்கமைப்பு வெளிநாட்டு பரீட்சைகள்கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம் தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை, பெலவத்தை, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு விண்ணப் படிவங்களை அனுப்புதல் வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த–7)

## மண் கொள்ளை

(தனங்கிளப்பு)

தென்மராட்சி நுணாவில் வயல் பிரதேசத்தில் அமைந்துள்ள மண் பிட்டிகளில் உள்ள சில விசமிகளால் பெருமளவில் மண் ஏற்றி செல்லப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. இதனை தட்டிக்கேட்கும் அப்பகுதி விவசாயிகள் தாக்கப்படுகின்றனர்.

எனவே இம் மண் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபடுவோரை தடுத்து நிறுத்த கிராமசேவையாளரும், பொலிஸாரும் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பகுதி மக்கள் வேண்டிநிற்கின்றனர். (து–37)









நேற்று முன்தினம் கொடிகாமத்தில் பஸ் சாரதியும் நடத்துநரும் இராணுவத்தினரால் தாக்கப்பட்டதற்கு ஆட்சேபனை தெரிவிக்கு முகமாக இ.போ.ச.ஊழியர்களால் மேற்கொள்ளப்பட்ட வேலை நிறுத்தப் போராட்டம் காரணமாக யாழ்.மத்திய பஸ் நிலையம் சேவை இழந்து வெறிச்சோடிக் கிடப்பதையும், பஸ் வண்டியை எதிர்பார்த்து பயணிகள் காத்துக் கிடப்பதையும், சிற்றூர்திகளால் மக்கள் முண்டியடித்துக்கொண்டு ஏற முயற்சிப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:– தீலீவின்பன்)

# இறுதித் தீர்வுக்கு நிபுணர் குழுவை நியமிப்பது அரசாங்கத்தின் ஏமாற்று வேலையே!

## அரசியல் ஆய்வாளர் மு.திருநாவுக்கரசு



இலங்கை இனப்பிரச்சினைக்கு இறுதித் தீர்வு காண அரசாங்கமானது நிபுணர் குழுவை அமைத்திருப்பது ஒரு ஏமாற்றுவேலை- இழுத்தடிப்பு வேலை என்று தமிழீழத்தின் மூத்த ஆய்வாளர் மு.திருநாவுக்கரசு சாடியுள்ளார்.

தமிழீழத் தேசியத் தொலைக்காட்சியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஒளிபரப்பாகிய நிலவரம் நிகழ்ச்சியில் பங்கேற்று அவர் கருத்து தெரிவித்த போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்,

இந்தியாவும் அமெரிக்காவும் ஒரேவிதமான கருத்தோட்டத்தை இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக கொண்டுள்ளன. இருவருமே ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போல் இனப்பிரச்சினையில் ஒருங்கிசைவான திட்டத்தைக் கொண்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளையும் அரசாங்கத்தையும் ஒரே மாதிரியாக அரவணைப்பதன் மூலம் ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைப்பதற்கான வாய்ப்பு பற்றி மேற்குலகம், இந்தியாவின் அனுசரணையுடன் சிந்தித்திருக்கிறது. ஆனால் ஐரோப்பியத் தடை மூலம் அம்முயற்சி தோல்வியில் முடிவடைந்துவிட்டது.

### இந்தியா, அமெரிக்காவின் பொறுப்பு யாது?

ஐரோப்பியத் தடையானது தமிழீழ விடுதலைப் புலிகளின் மீதும் தமிழ் மக்களின் மீதும் ஒடுக்குமுறைகளை ஏவிவிடுவதற்கு தனக்குக் கிடைத்த சந்தர்ப்பம் என மஹிந்த ராஜபக்ஷ கருதுகிறார். இந்நிலையில் இலங்கையின் நிலைமைகளை அடக்க வேண்டிய பொறுப்பு இந்தியாவையும் அமெரிக்காவையும் சார்ந்துள்ளன.

அமெரிக்காவினால் கையாளப்பட்ட முறைக்கு பதிலாக இந்தியா மூலம் ராஜபக்ஷ அரசாங்கத்தை தணிக்கவேண்டிய சிந்தனையோட்டம் தான் இப்போது நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

ராஜபக்ஷ அரசாங்கமானது தீவிரமான இராணுவ மற்றும் அரசியல் நிலைப்பாடுகளை மேற்கொள்ளும் போது அதற்குப் பதிலாக விடுதலைப் புலிகள் அமைதி காத்துக் கொண்டிருக்க முடியாது. அதற்கான பிரதிபலிப்புகள் அரசியலில் வெளிப்பட யுத்தத்தின் விளிம்பு நிலைக்கு அது கொண்டு செல்லப்பட்டது.

இந்நிலையில் ராஜபக்ஷ அரசாங்கத்தைத் தான் தணிக்கலாம் என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது. மேற்குலகின் அழுத்தங்களுக்கு பணியாத ராஜபக்ஷவை அருகிலிருக்கும் இந்தியாவின் அழுத்தங்களூடாக பணிய வைக்கும் ஒரு இராஜதந்திர அணுகுமுறை கையாளப்படுகிறது.

இப்போது அரசாங்கம் தீர்வுத் திட்டத்துக்கு தயாராக இருப்பது போன்ற ஒரு தோற்றம் உருவாக்கப்படுகிறது. இலங்கை விடயத்தில் இந்தியா தீவிரமாக ஈடுபடத் தொடங்கியுள்ளது தெரியவந்துள்ளது. அமெரிக்கா அதற்கு அனுசரணையாக நடப்பதாகவும் தெரியவந்துள்ளது.

கூட்டாட்சியின் உரிமைகள் தமிழ் மக்களுக்கு உண்டு என்கின்ற கருத்தை அமெரிக்கா இப்போது முன்வைக்கும் அளவுக்கு நிலைமயை தணிய வைக்க வேண்டிய தேவை இருக்கிறது. இந்த நிலையில் இந்தியாவின் வற்புறுத்தலை சிறிலங்கா அரசாங்கம் நிராகரிக்காது. ஏனெனில் இந்தியாவை விட அமெரிக்காவின் வற்புறுத்தல் அதாவது அது முன்வைக்கும் தீர்வு பெரிதாக உள்ளது.

ஆகவே இந்தியாவை அனுசரித்துப் போகவே இலங்கை அரசாங்கம் விரும்பும். இது யுத்தத்தைத் தணிக்கும் நிலைமையை உருவாக்கும். இந்திய- அமெரிக்க அரசாங்கங்களின் பிரதான நோக்கமும் அதுவே.

இலங்கையின் இனப் பிரச்சினையானது சமாதான வழியில் தீர்க்கப்படக் கூடியது என்று ஒரு பைத்தியக்காரனைத் தவிர வேறு எவனும் சொல்லமாட்டார்கள். பேச்சுவார்த்தை மூலமாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என்பது ஒரு குழந்தைப் பிள்ளைக்கும்கூடத் தெரியும்.

இப்போது ராஜபக்ஷ அரசாங்கமானது தீர்வு காண்பதற்காக ஒரு நிபுணர் குழுவை அமைத்திருப்பதாகவும் பல கட்சி அனுசரணைக் குழு ஒன்றை உருவாக்கியிருப்பதாகவும் கூறுகிறது. இதில் ஒரு முக்கியமான நாடகம் ஒன்று நிகழ்கிறது. இப்போது இந்தப் பிரச்சினையை ஒரு நிபுணத்துவ பிரச்சினையாக்கப் பார்க்கிறார்கள். நிபுணர் குழு என்று சுத்த ஏமாற்று வேலை. ஏனெனில் தமிழ் மக்களின் பிரச்சினைகளை ஆராய்வதற்கு நிபுணத்துவ மூளை தேவையில்லை. இது நிபுணத்துவ பிரச்சினை அல்ல. கொள்கைப் பிரச்சினை.

### மஹிந்தவின் கொள்கை மாற வேண்டும்

ராஜபக்ஷ அரசாங்கமானது ஒற்றையாட்சிக் கோட்பாட்டை முன்வைத்த பின்னர் இப்போது தீர்வைப் பற்றி கதைப்பது என்றால் அது கொள்கை மாற்றத்துக்குத்தான் போகவேண்டும். அவர் தனது கொள்கையை முன்வைக்க வேண்டும். அதாவது தான் ஒற்றையாட்சி அல்லாத ஒரு தீர்வுத் திட்டத்துக்கு வருகிறேன் என்று அதனை முதன்மைப்படுத்த வேண்டும். கொள்கைப் பிரச்சினையை முன்வைப்பது அரசியல் தலைவர்களின் பணி. நிபுணத்துவ பிரச்சினை என்பது உத்தியோகத்தர்களின் பணி. சாதாரணமான உத்தியோகத்தர்களை கூட்டிக் கொண்டு பேச்சுவார்த்தை போன்றதொரு தோரணையை தீர்வுக்குத் தயார் என்ற ஒரு நாடகத்தை அவர்களால் அரங்கேற்ற முடிகிறது.

ஒற்றையாட்சியின் கீழான தீர்வும் இந்தியா அல்லது அமெரிக்கா முன்வைக்கின்ற தீர்வும் எந்தப் புள்ளியிலும் சந்திக்கவே முடியாது. நிபுணர்களின் கைக்கு பிரச்சினையை மாற்றிவிட்டால் அவர்கள் நிபுணத்துவ பாணியில் ஆராய்வார்கள். தங்கள் மூளையை அதனுள் செலுத்திவிடுவர். இறுதியில் நிபுணத்துவ பயிற்சி பட்டறையாக அது இருக்குமே தவிர தீர்வு என்று ஏதும் வரப் போவதில்லை.

ஒற்றையாட்சியின் கீழ் அதிகாரப் பரவலாக்கல் என்பது அரசியலை கேலி செய்வதாகும். ஒற்றையாட்சியின் கீழ் நிர்வாகப் பரவலாக்கலைத்தான் செய்ய முடியுமே தவிர அரசியல் அதிகாரப் பரவலாக்கலை செய்ய முடியாது. ஒற்றையாட்சியின் கீழ் மேற்கொள்ளப்படும் எந்த ஒரு செயலும் நிர்வாக அளவிலான செயலே.

தமிழ்மக்களை விடவும் இலங்கை அரசாங்கத்தை அனுசரித்துப்போவதன் மூலமே இலங்கைத் தீவின் நலன்களை அனுபவிக்க வாய்ப்பாக இருக்கும் என்று மேற்குலகம் கருதுகின்றது. அவர்கள் ஒன்றை மறந்துவிட்டார்கள். இலங்கைத் தீவில் தமிழ் மக்கள் நீண்ட பாரம்பரியத்துடனும் நீண்ட கலாசார வரலாற்றுடனும் ஒருபோதும் எதிரிகளிடம் சரணடையாத பாரம்பரியத்தையும் கொண்ட மக்கள். இதை பண்டார நாயக்க ஒருமுறை கூறியுள்ளார்.

தமிழ் மக்களிடம் இருக்கின்ற கலாசாரத்தளம் பாரதூரமான வலுவைக் கொண்டது. மிகவும் வளர்ச்சியடைந்த, மிகவும் உறுதியடைந்த தேசியத் தனித்துவத்திற்கான அடித்தளம் தமிழ் மக்களிடத்தில் இருக்கிறது அதை ஒருபோதும் கரைக்க முடியாது. அது உணர்ச்சிவசமான தளம் அல்ல. உணர்வுபூர்வமான தளம். இதை சிங்கள மேற்கத்திய ஆய்வாளர்களும் ஏன் இந்திய அரசியல் நிபுணர்களும் புரிந்துகொள்ளத் தவறி விடுகின்றனர். இதனைப் புறக்கணித்துவிட்டு நடைபெறும் எந்த ஒரு அரசியல் தீர்மானங்களும் 100 வீதம் தோல்வியைத்தான் தழுவும்.

### சீனாவின் இராணுவ முகாமாக இலங்கை

இந்தியாவுக்கும் சீனாவுக்குமான உறவு என்பது புதிய விடயம் அல்ல. தற்போதைய சீனத் தலைவர் பதவிக்கு வந்தபோது பூனை கறுப்போ வெள்ளையோ அது எலி பிடித்தால் போதும் என்றார்.

'சீனாவை உலகின் முதல்தர வல்லரசாக்க வேண்டுமெனில் சீனாவுக்கு இப்போது தேவை சமாதானம். சீனா வேறு நாட்டுடன் சண்டை பிடிக்குமேயானால் சமாதான திட்டங்கள் இல்லாமல் பொருளாதாரம் சீர்குலைந்து போய்விடும். எனவே சீனா வளர சமாதானம் அடிப்படையானது' என்றும் கூறினார்.

அயல் நாடுகளுடனும் நல்லுறவு, சமாதானக் கொடியின் கீழ் சீன அரசியல் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தி- இராணுவத்தை தொழில்களை நவீனமயமாக்குதல் என்று தனது ஆட்சியை அவர் தொடங்கினார். அவர் கூறியதன் அடிப்படையில்தான் இந்தியாவுடனான சமாதான நடவடிக்கைகளை நாம் பார்க்க வேண்டியுள்ளது.

சீனாவுக்கு இந்தியாவுடன் உள்ள வர்த்தகம் பற்றி சில கருத்துக்கள் கூறப்படுகின்றன. ஆனால் அரசியல் இராணுவ ரீதியாக வினோதமான ஒரு இடத்தில் போய் முடியக்கூடும். எப்படியெனில் பொருளாதாரத்தைப் பொறுத்தவரையில் இருதரப்பு வர்த்தகத்தில் இந்தியாவுக்குக் கிடைக்கும் வருமானம்தான் அதிகம் என்று சொல்லப்படுகிறது.

சீனாவுக்கு இந்தியா விற்கின்ற பண்டங்கள் எல்லாம் உற்பத்திப் பண்டங்கள் அல்ல. மாறாக முற்றிலும் மூலப்பொருட்கள். இந்தியாவின் பிரதானமான வர்த்தக நடவடிக்கை என்பது முற்றிலும் மூலப் பொருட்களை மையமாகக் கொண்டவை.

சீனாவின் வர்த்தக நடவடிக்கை என்பது முற்றிலுமாக உற்பத்திப்பண்டங்களை மையமாகக் கொண்டவை. இருதரப்பு வர்த்தகத்தை காசால் பார்க்கும்போது பெரிதாகத் தோன்றும். ஆனால் பொருளாதார ரீதியாக சீனாவுக்கு மிகப்பெரிய இலாபம் உண்டு. இதன் மூலம் சீனாவின் தொழில் வளர்ச்சி அதிகரிக்கும். அதிக எண்ணிக்கையில் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க முடியும்.

முன்பு நாடுகளைக் கைப்பற்றி மூல வளங்களைப் பெற்றதைப் போல் அல்லாமல் இப்போது மூலவளங்களைப் பெறுகின்ற தந்திரோபாயத்தில் சீனா முன்னுக்கு நிற்கிறது. இந்திய அரசுக்கு இது விளங்காத விடயம் அல்ல. அரசாங்கத்துக்கு இருக்கின்ற நெருக்கடியில் திறைசேரியை நிரப்ப வேண்டும். மூலப்பொருளையாவது விற்றாவது திறைசேரியை நிரப்ப வேண்டிய நிர்ப்பந்தம் இந்தியாவுக்கு உள்ளது. இந்த நிலையில் இந்திய விமானங்களை சீனாவில் பறக்க விடுவதன் மூலம் நற்செய்தி ஒன்று இருப்பதாக இந்திய மக்களுக்கு காட்டப்படுகிறது. சீனா விட்டுக் கொடுப்பதான தோற்றத்தை உருவாக்குகின்றனர்.

ஆனால் இது சீனாவின் சந்தையை இந்தியாவில் மிகவும் அகலமாக்கிவிடும். இந்த வகையில்தான் அண்மைய கணவாய் திறப்பும். இது மோசமான இராணுவ விளைவுகளை உருவாக்கிவிடும் என்று இராணுவ நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இன்னொரு யுத்தம் நடக்குமாக இருந்தால் இந்தப் பாதைக்கூடாக விரைவாக தனது இராணுவத்தை சீனா நகர்த்திவிடும் என்றும் புற்றீசல்கள் போல் இந்தியாவுக்குள் பரவ முடியும் என்றும் கூறுகின்றனர்.

சீனாவைப் பொறுத்தவரையில் இலங்கையின் மூல வளங்களோ சந்தையோ அவர்களுக்கு பிரதானம் அல்ல. மாறாக இலங்கையைக் கட்டுப்படுத்துவதன் மூலம் இந்திய சந்தையைக் கைப்பற்றுவதுதான் பிரதான நோக்கம். பிரமாண்டமான இந்தியாவுக்குள் உள்ள சந்தையைப் பிடிக்க இலங்கை ஒரு களமாக உள்ளது.

சீனாவைப் பொறுத்தவரையில் இலங்கை ஒரு இராணுவ முகாம். அதற்கு அவர்கள் செலவிடத் தயாராக உள்ளனர். இலங்கையில் சீனா செலவிட்டுள்ள தொகையை விட இந்தியச் சந்தையைக் கைப்பற்றுவதன் மூலம் பல மடங்கு வருமானத்தை இந்தியாவில் பெற முடியும். அப்படியெனில் இலங்கையில் அவர்கள் செய்யும் செலவானது இந்தியாவில் வருமானத்தைப் பெறுவதற்கான முதலீடுதான். எனவே வெறும் அர்த்தத்தில் பார்த்தால் செலவீட்டுத் தொகையாகவும் நட்டமாகவும்கூட தோன்றலாம். ஆனால் அது முதலீடுதான். இப்படித்தான் நாம் பார்க்கவேண்டும்.

இலங்கை இனப்பிரச்சினையை வாஷிங்டன், புதுடில்லி, சென்னை, கொழும்பு என பார்த்து கிளிநொச்சி என விரிவடைந்துள்ளது. இவற்றுக்கு ஊடாக போடப்படுகின்ற ஒரு நேர்கோட்டின் கீழ் இலங்கையின் அரசியல் நிலைமைகளை நாம் பார்க்க வேண்டும். இதில் ஒரு புள்ளி சென்னையைப் பற்றியது.

சென்னைக்கு என்று தனிப்பட்ட நலன்களும் தேவைகளும் உண்டு. அதேபோல் புதுடில்லிக்கு என்று தனிப்பட்ட நலன்களும் தேவைகளும் உண்டு. இந்த இரண்டும் சிலவேளைகளில் சந்திக்கும். சந்திக்காமலும் விடும். ஆனால் பொதுவாக புதுடில்லி சென்னையுடன் அனுசரித்து ஒரு தீர்வை எடுப்பதையே விரும்புகிறது.

வாஷிங்டன், புதுடில்லி, சென்னை மூன்றும் ஒரு பொதுவான முடிவுக்கு வந்துள்ளது. ஒன்றையொன்று பிரித்துப் பார்க்க முடியாது. சென்னையைச் சார்ந்திருக்கின்ற ஊடகவியலாளர்கள் தூண்டப்படுகிறார்கள். அவர்கள் தூண்டப்படும்போது எல்லைக்கு மீறிச் செயற்படுகின்றனர்.

புலிகளை அமர்த்தி ஒரு தீர்வுக்கு வர வேண்டும் என்று புதுடில்லி நினைக்கிறது. உதாரணத்துக்கு ஒரு சமஷ்டி ரீதியான தீர்வு ஏற்பட்டு புலிகளிடம் கைகளில் முழு அதிகாரங்கள் போய் அது புலிகளின் அரசாங்கமாக இருந்துவிட்டால் அது நாடைப் பிரிப்பதற்கான இன்னொரு கட்டத்துக்குப் போய்விட முடியும் என்று புதுடில்லி நினைக்கிறது. அப்படி அல்லாத ஒரு நிலையை உருவாக்குவதில் புதுடில்லிக்கு அக்கறை இருக்கிறது. இங்கு ஒரு தேசிய சக்தி வந்து விடக்கூடாது என்பதுதான் புதுடில்லியின் ஆழமான பிரச்சினை.

ஆனால் தமிழ் மக்களின் பிரச்சினை இல்லையெனில் கொழும்பை புதுடில்லி கையாள முடியாது. தமிழ் மக்களின் பிரச்சினையானது புதுடில்லிக்கு ஒரு வரப்பிரசாதம். இதை வைத்துக்கொண்டு அதே நேரத்தில் தமிழ் மக்களின் பிரச்சினையானது ஒரு உறுதியடைந்த தேசியத்தன்மையை அடையக் கூடாது என்பதிலும் உறுதியாக உள்ளனர்.

இந்த இரண்டும் கெட்டான் நிலை புதுடில்லியிடம் இருக்கிறது. இந்த நிலையில் தான் எல்லாவற்றையும் துண்டு துண்டாக சாம்பாராகப் பார்க்கிறார்கள். ஆனால் இலங்கையின் வரலாறு- தமிழ் மக்களின் வரலாறு எப்போதும் தேசியத்தின் பக்கமே நிற்கிறது. அதற்கான பலமான பண்பாட்டு- கலாசாரத் தனித்துவதளம் எம்மிடம் உண்டு. அதை ஒருவராலும் கரைத்துவிட முடியாது.

தமிழீழத் தமிழர்களின் சராசரி மனநிலையை உதாரணமாகச் சொல்லலாம். எவரேனும் புத்தி சொன்னால் செவிமடுப்பார்கள். ஆனால் தான் நினைத்ததையே ஒவ்வொரு ஈழத்தமிழரும் செய்வர். அது ஒரு வகையான தனித்துவமானது. அப்படியே புத்தி கெட்டாலும் அது தனக்கு சாதகமோ பாதகமோ என உணர்ந்து தனக்கு ஏற்பானவற்றை சிந்திக்கும் கலாசார வளர்ச்சி தமிழனிடத்தில் உண்டு. இலகுவில் தங்களைக் கூட்டமாக்க் கரைத்துக் கொள்ள மாட்டார்கள் என்றார். (தி)

## இன்று ஒரு தகவல்

# தர்மம்

ஒரேயொரு ஊரில் ஒரு ராஜா இருந்தாராம். அவர் ஒருநாள் மாறுவேடம் போட்டுக்கொண்டு நகர்வலம் வந்திருக்கிறார். இரவு நேரத்தில் ஒரு குதிரை மீது ஏறி தனது நகரமெல்லாம் எப்படியிருக்கிறது என்று சுற்றிப்பார்த்துக்கொண்டே வருகிறார். நகரத்திற்கு வெளிப்பக்கமாக ஒரு ஆள் பரிதாபமாக உட்கார்ந்திருந்தான். அந்தப் பக்கமாக வந்த ராஜா இதைப் பார்த்தார். "ஏனப்பா இந்த நேரத்தில் இப்படி உட்கார்ந்திருக்கிறாய்?" என்று கேட்டார். "ஐயா...நான் ஊருக்குள்ளே போக வேண்டும் என்னைக் கொஞ்சம் உங்கள் குதிரை மீது ஏற்றிக் கொண்டு போய்விட்டீர்கள் என்றால் மிகவும் உதவியாக இருக்கும்" என்றான் அவன்.

"சாி!ஏறிக்கொள்!" என்றார் அவர்."என்னால் ஏறமுடி யாது... நீங்கள் தான் என்னை தூக்கி அங்கே உட்கார வைக்க வேணடும். ஏனென்றால் நான் கை கால் விளங்காதவன. எனது கால் இரண்டும் உணர்ச்சி இல்லாத மரக்கட்டை மாதிரி ஆகிவிட்டது. அதனால் தான் நடக்க முடியாமல் இங்கேயே கிடக்கிறேன்" என்றான். "ஐயோ... பாவம்" என்று பரிதாபப்பட்டு கீழே இறங்கினார். அவனைத் தூக்கி குதிரை மீது உட்கார வைத்தார்.

அவ்வளவு தான்... அந்த ஆள் குதிரையை அடித்து விரட்டிக்கொண்டு போய்விட்டான். ஆமாம்!அவன் நிஜமாகவே கை கால் விளங்காதவன் இல்லை. அவன் ஒரு திருடன். குதிரையைக் கடத்திக்கொண்டு போவதற்குத் தான் இதுபோல் வேஷம் போட்டிருந்தான். ராஜா ஏமாந்துபோய் கீழேயே நின்றுவிட்டார். அவருக்கு மிகவும் அவமானமாகிவிட்டது. இருந்தாலும் யாருக்கும் தெரியாமல் பேசாமல் அரண்மனைக்கு திரும்பி வந்துவிட்டார். இந்த விஷயத்தை யாரிடமும் சொல்லவில்லை.

கொஞ்சநாள் கழித்து ஒருநாள் அரண்மனையில் வழக்கு விசாரணை நடந்துகொண்டிருந்தது. ராஜா ஒவ்வொரு வழக்காக விசாரித்து தீர்ப்பு வழங்கிக் கொண்டிருந்தார். திடீரென்று ஒரு ஆளைக் கொண்டு வந்து நிறுத்தினார்கள். "மன்னா... இவன் பல இடங்களில் திருடியிருக்கிறான்.கொள்ளையடித்திருக்கிறான். நேற்றிரவு இவன் ஒரு வீட்டில் நுழைய முயற்சி செய்தபோது நமது காவலாளிகள் பார்த்துவிட்டார்கள். அதுதான் பிடித்து இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள்"என்றார் அமைச்சர்.

ராஜா நிமிர்ந்து பார்த்தார். அன்று தன்னை ஏமாற்றிய அதே ஆள்தான் இவன் என்பதைப் புரிந்துகொண்டார். ஆனால் அவனுக்கு இவரைத் தெரியவில்லை. ஏனென்றால் அன்று மாறுவேடத்தில் இருந்தாரல்லவா? அதுதான். ராஜா பார்த்தார். "தீர்ப்பு நாளை வழங்கப்படும்" என்று கூறிவிட்டு சபையைக் கலைத்துவிட்டார். அந்த ஆளைக் கொண்டுபோய் சிறையில் அடைத்துவிட்டார்கள்.

அன்றிரவு எல்லோரும் தூங்கிய பின்பு ராஜா ரகசியமாக சிறைக கூடத்திற்குப் போய் அந்த ஆளைப் பார்த்தார். " என்னை உனக்கு அடையாளம் தெரிகிறதா! நன்றாகப் பார்" என்றார். "என்ன இப்படிக் கேட்கிறீர்கள்? நீங்கள் மகாராஜா" என்றான. அது இல்லை. இதற்கு முன்பு என்னை எங்காவது பார்த்த ஞாபகம் இருக்கிறதா? என்று கேட்டார். இல்லையே! என்றான. ராஜா தனது அலங்காரத்தைக் கலைத்தார். உடனே அந்த ஆளுக்கு ஞாபகம் வந்துவிட்டது.

"மனனா! அன்று குதிரையைக் கடத்திக்கொண்டு போனது உங்களிடமிருந்தா? என்னை மன்னித்துவிடுங்கள்" என்று கூறிக் காலில் விழுந்தான். "இதோ பாரப்பா... எழுந்திரு நான் சொல்வதைக் கவனமாகக் கேள். நாளைக்கு நான் தண்டனை கொடுக்கப்போவது நீ திருடமுயன்ற வழக்கிற்காக. அன்று நீ என்னை ஏமாறறியதற்கு நான் உன்னை தண்டிக்கப் போவதில்லை... அதுமட்டுமல்ல நான் உன்னிடம் ஏமாந்த விஷயத்தை நீ யாரிடமும் கூறிவிடாதே! அந்த ரகசியம் நம் இருவருக்குள்ளும் தெரிந்ததாக இருக்கட்டும்" என்றார்.

இநதக் கதையை ஒரு நண்பர் என்னிடம் கூறிவிட்டு "அந்த ராஜா ஏன் அந்த ஆளிடம் அப்படிச் சொன்னார்?"என்று ஒரு கேள்வி கேட்டார். நான் யோசித்துப் பார்த்து விட்டுப் பதில் சொன்னேன் "ராஜாவே திருடனிடம் ஏமாந்துவிட்டார் என்ற விஷயம் தெரிந்தால் அது மிகவும் கேவலம் இல்லையா? அதனால் அப்படிச் சொல்லியிருப்பார்" என்றேன். நண்பர் சிரித்தார். எல்லோரும் இப்படித்தான் சொல்கிறார்கள். ஆனால் அது காரணம் இல்லை என்றார். "சரி நீங்களே சொல்லுங்கள்... ராஜா ஏன் அப்படிச் சொன்னார்?" என்று அவரிடமே கேட்டேன்.அவர் சொன்னார்.

"அதாவது என்ன விஷயம் என்றால் அந்த சம்பவம் வெளியே எல்லோருக்கும் தெரிந்துவிட்டால் கஷ்டப்படுபவர்களுக்கு கை கொடுக்க எல்லோரும் தயங்க ஆரம்பித்து விடுவார்கள். உண்மையாகக் கஷ்டப்படுகிறவனைக் கூட இவன் ஏமாற்றுப்பேர் வழியாக இருப்பானோ என்று சந்தேகம் கொள்ள ஆரம்பித்துவிடுவார்கள். அதன்பின் நாட்டில் தர்மம் கெட்டு விடும். யாரும் உதவிசெய்ய முன்வரமாட்டார்கள். அப்படி ஒரு நிலைமை நமது நாட்டுக்கு வந்துவிடக்கூடாது என்பதற்காகத்தான் ராஜா அப்படிச் செய்தார்" இதுதான் நண்பன் கொடுத்த விளக்கம்! ராஜா என்றால் இப்படியல்லவா இருக்கவேண்டும் என்றார்.

இந்தக் கதையைக் கேட்ட பின் இப்படி நடந்தாலும ஆச்சரியப்படுவதற்கில்லை சார் என்றேன். எப்படி என்றார். ஒரு ஆள் குதிரையில் வந்துகொண்டிருக்கிறான். வழியில் ஒருவன் "ஐயா எனக்கு கை கால் விளங்கவில்லை எனக்கு உதவி செய்யமுடியுமா?" என்று கேட்கிறான. "வேண்டாம் நீ என்னை ஏமாற்றி விட்டு இந்தக் குதிரையைக் கடத்திக்கொண்டு போய்விடுவாய்"என்கிறான் அவன். "அது எப்படி அவ்வளவு சரியாகச் சொல்கிறாய்"என்று கேட்கிறான் இவன். அதற்கு அவன் "நான் ஏற்கனவே ஒருவனை அதுபோல் ஏமாற்றிவிட்டுத்தான் இந்தக் குதிரையைத் 'தள்ளிக்கொண்டு வருகிறேன்" என்கிறான்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# பல்கலைக்கழக விரிவுரைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் புதிதாக அனுமதிக்கப்பட்ட மாணவர்கள்,சிரேஷ்ட மாணவர்கள் ஆகியோருக்கான 2005/2006 ஆம் ஆண்டுக்கான விரிவுரை கள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

புதிய மாணவர்களுக்கான கலைப்பீடத்தின் விரிவுரைகள் (இராமநாதன் கல்லூரி நுண்கலைப்பீடம் உட்பட) இம் மாதம் 17ஆம் திகதி திங்கட்கிழமையும் சிரேஷ்ட மாணவர்களுக்கு 24ஆம் திகதி திங்கட்கிழமையும், விவசாய பீடத்துக்கான விரிவுரைகள் புதிய மாணவர்களுக்கும் சிரேஷ்ட மாணவர்களுக்கும் எதிர்வரும் 17ஆம் திகதி திங்கட்கிழமையும் ஆரம்பமாகும்.

அத்துடன் புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட துணை மருத்துவம் கற்கை நெறிக்கான விரிவுரைகள் ஓகஸ்ட் மாதம் 7ஆம் திகதி ஆரம்பமாகும்.

மருத்துவ பீட புதிய மாணவர்களுக்கான விரிவுரைகள் இம்மாதம் 17ஆம் திகதி திங்கட்கிழமையும் சிரேஷ்ட மாணவர்களுக்கு ஆகஸ்ட் மாதம் 7ஆம் திகதியும்,

முகாமைத்துவமும் வர்த்தகமும் கற்கை நெறிக்கான விரிவுரைகள் புதியமாணவர்களுக்கு இம் மாதம் 17ஆம் திகதி திங்கட்கிழமையும் சிரேஷ்ட மாணவர்களுக்கு 24ஆம் திகதியும்,

விஞ்ஞான பீடத்தின் புதிய சிரேஷ்ட மாணவர்களுக்கான விரிவுரைகள் செப்ரெம்பர் மாதம் 11ஆம் திகதியும் சித்த மருத்தவ பீடத்தின் புதிய மாணவர்களுக்கான விரிவுரைகள் ஓகஸ்ட் 4ஆம் திகதியும் ஆரம்பமாகும். சித்த மருத்துவ பீடத்தின் சிரேஷ்ட மாணவர்களுக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனத் தெரிகிறது. (து-133)

## தூவல் நீர்ப்பாசன கருவி வழங்கல்

(கோண்டாவில்)

தேசிய அபிவிருத்தி அமைச்சின் அனுசரணையுடன் விவசாய திணைக்களத்தால் கடந்த சிறுபோகத்தின் போது 50 வீத மானிய அடிப்படையில் 66 பேருக்கு வழங்கப்பட்ட தூவல் நீர்ப்பாசன தொகுதியின் மீள் அறவீட்டில் இருந்து எதிர்வரும் காலபோகத்தில் 10 பேருக்கு தூவல் நீர்ப்பாசன தொகுதிகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வலிகிழக்கு பிரதேச செயலர் பிரிவில் 5 பேருக்கும், தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் 3 பேருக்கும், உடுவில் பிரதேச செயலர் பிரிவில் 2 பேருக்கும் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக தூவல் நீர்ப்பாசன தொகுதிகள் வழங்கப்படவுள்ளதாக விவசாய உத்தியோகத்தர் கே.சிறிபால சுந்தரம் தெரிவித்துள்ளார்.' (து-36)

# அளவை, நிறுவை மோசடிகளில் ஈடுபடும் வர்த்தகர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை

## எடுக்கப்படும் என்கிறார் வர்த்தக நுகர்வோர் அமைச்சர்

(கொழும்பு)

உணவுப் பொருட்கள் விற்பனையில் பெருமளவான வர்த்தக நிலையங்கள் அளவை, நிறுவை மோசடியில் ஈடுபட்டு வருவதாக முறைப்பாடுகள் கிடைத்து வருவதால் இது குறித்து கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு வர்த்தக நுகர்வோர் விவகாரத்துறை அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தனது அமைச்சின் கீழுள்ள குறித்த நிறுவனங்களுக்கு கடந்த திங்கட்கிழமை பணிப்புரை விடுத்துள்ளார்.

இப் பணிப்புரையை வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சின் கீழுள்ள அளவைகள் நிறுவனங்கள் திணைக்களத்திற்கும் வர்த்தக நுகர்வோர் விவகார அதிகார சபைக்கும் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே விடுத்தார்.

மஹிந்த சிந்தனையின் கீழ் நாட்டு மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை குறைந்த விலையில் பெற்றுக் கொடுக்கும் திட்டத்தின் முதலாவது வர்த்தக மத்திய நிலையம் கடந்த திங்கட்கிழமை ராஜகிரியவில் திறந்து வைக்கப்பட்டது.

இவ் வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

உணவுப் பொருட்களை பொதி செய்தும் பக்கெற்றுக்களில் அடைத்தும் விற்பனை செய்வதில் நிறைய மோசடிகள் இடம் பெறுவதாக தகவல் கள் கிடைக்கின்றன.

குறிப்பாக அளவை, நிறுவையிலேயே இம்மோசடிகள் இடம்பெறுவதாகக் கூறப்படுகிறது .எனவே இது தொடர் பாக நான் அறிவுறுத்தல் வழங்கும் வரையும் காத்திருக்காமல் மோசடிகளைக் கட்டுப்படுத்த துரித நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இவ்வாறான மோசடிகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கவும் பின் நிற்கக்கூடாது

மஹிந்த சிந்தனையின் கீழ் நாட்டு மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை குறைந்த விலையில் பெற்றுக்கொடுக்கும் திட்டத்தின் கீழேயே இந்த வர்த்தகத் தொகுதி திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.

இப்படியான வர்த்தக மத்திய நிலையம் நாட்டில் வேறு எங்குமே இல்லை. இது முன்னோடித் திட்டமாகவே நடைமுறைப்படுத்தப்படுகின்றன என்றார். (த-9)

# எமது கட்சியைப் பாதுகாக்குமாறு எந்த நாட்டிடமும் கோரவில்லை

## ஐ.தே.கவின் பிரதிப் பொதுச் செயலாளர்

(கொழும்பு)

தமது கட்சியைப் பாதுகாக்குமாறு சர்வதேச நாடுகள் எவற்றிடமும் தாம் கோரிக்கை விடுக்கவில்லையென ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.


குறிப்பாக இந்தியாவிடம் இந்தக் கோரிக்கையை விடுக்கவில்லையென அக் கட்சியின் பிரதிப்பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசுடன் இணைவதனை தடுப்பதற்கு இந்தியாவின் உதவியைக் கோரியதாக சிலர் பிரச்சாரங்களை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் திஸ்ஸ அத்தநாயக்க குற்றம் சாட்டினார்.

தமது கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களை அர சாங்கத்தில் இணைப்பதானது அரசு தன்னுடைய ஆட்களை அதிகரிப்பதற்கான முனைப்பு மாத்திரமேயானதாகும். இதனால் சமாதானத்திற்கான முயற்சியினை சக்தி மயப்படுத்த முடியாதெனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை ,அரசாங்கத்துடன் தமது கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் இணைவது தனிப்பட்ட நோக்கங்களைக் கொண்டது எனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் பிர திப்பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்த நாயக்க மேலும் தெரி வித்தார். (கு-5)



மருதங்கேணி உதவி அரசாங்க அதிபராக கடந்த இரண்டு வருடங்களாக கடமையாற்றிய ஆர்.ரி. ஜெயசீலன் காரைநகர் உதவி அரசாங்க அதிபராக இடமாற்றம் பெற்று செல்வதை முன்னிட்டு குடத்தனை உப அலுவலகத்தில் நடைபெற்ற பிரியாவிடை வைபவத்தில் சமூகசேவை உத்தியோகத்தர் எல்.எச்.ஜெ.ஜீவரட்ணம் உதவி அரசாங்க அதிபருக்கு மலர் மாலை அணிவிப்பதையும், உத்தியோகத்தர்கள் கூட்டாக எடுத்துக்கொண்ட படத்தையும் காணலாம்.

(படங்கள். மருதங்கேணி செய்தியாளர்)

# வங்கிக் கணக்குகள் முடக்கப்படும் இந்து ஆலயங்கள்

மத்திய வங்கியின் பணிப்புரைக்கமைய இயங்காத நிலையிலுள்ள வங்கிக் கணக்குகளை அரசுடைமையாக்கும் நடவடிக்கையால் புலம்பெயர்ந்தவர்கள் மாத்திரமல்ல; அவர்களால் வழிபட்டு வந்த வலி வடக்குப் பிரதேசத்தில் அதி உயர் பாதுகாப்பு வலயத்துக்குட்பட்ட ஆலயங்கள் கூடப் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

அதி உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் இருக்கும் மயிலிட்டி ஆஸ்பத்திரி 1987 ஆம் ஆண்டிலிருந்து பொது மக்கள் பாவனையில் இல்லை. இந்நிலையில் ஆஸ்பத்திரி வளாகத்தில் உள்ள முருகன் ஆலயத்தின் செயற்பாடுகளும் ஸ்தம்பிதமடைந்துள்ளன. மயிலிட்டி ஆஸ்பத்திரி கோப்பாய்க்கு மாற்றப்பட்ட போதிலும் முருகன் ஆலயம் இருந்த இடத்திலேயே இருக்கும் என நம்பப்படுகிறது.

இந்நிலையில் இலங்கை வங்கியின் யாழ்ப்பாணக் கிளை மேற்படி ஆலயத்தின் பெயரில் உள்ள வங்கிக் கணக்கை முடக்க முயல்வது மனிதாபிமானமற்றதும், தெய்வ சிந்தனைக்குரியதுமான ஒரு செயல் மாத்திரமல்ல- விஷமத்தமாக ஒரு செயலுமாகுமெனக் கருதப்படுகிறது. பௌத்த ஆலயமொன்றுக்கு இந்நிலை ஏற்பட்டால் அரசாங்கமோ, பௌத்த மக்களோ கண்மூடி மௌனிகளாக இருப்பார்களா என்ற கேள்வியும் எழாமல் இல்லை. உயர் பாதுகாப்பு வலயத்துக்குட்பட்ட ஓர் ஆலயத்தின் வங்கிக் கணக்கை எவ்வாறு இயங்கவைக்க முடியும் என அரசோ வங்கியோ சிந்திப்பதாகத் தெரியவில்லை.

இவ்விடயம் பற்றி தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் இந்து கலாசார அமைச்சினரும் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள் என மக்கள் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டேயிருக்கிறார்கள்.

சமாதான சூழல் ஏற்பட்டு பாதுகாப்பு வலயம் அகற்றப்பட்டு மக்கள் தமது சொந்த நிலத்தில் சுதந்திரமாக உலவும் நிலை ஏற்பட்டால் தான் மயிலிட்டி ஆஸ்பத்திரி முருகன் ஆலயத்திலும் விளக்கெரிய ஆரம்பிக்கும். (து)

## உணவின்றி அலையும் கால்நடைகள்

தனங்கிளப்பு, மறவன்புலோ அதிஉயர் பாதுகாப்பு வலயத்தில் கட்டாக்காலிகளாக உலவும் கால்நடைகள் தண்ணீரும் உணவும் இல்லாமல் நோய் வாய்ப்பு ஏற்படும் சூழ்நிலை காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. (து-37)

# புலிகளுக்கு எதிராக கொடி தூக்கும் அனைத்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சி

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆதரவளிக்கும் கட்சிகளை தடைசெய்ய வேண்டும் என அனைத்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கோரியுள்ளது.

கட்சியின் பொதுச் செயலர் வி.நாராயணசாமி இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில்,

ஈழமக்களை பாதுகாக்கும் அமைப்புகள் என்ற போர்வையில் இந்தியாவில் உள்ள சில கட்சிகள் தமிழீழ விடுதலைப்புலிகளை ஆதரிக்கின்றன.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியைக் கொலை செய்தமை தொடர்பில் தமிழீழ விடுதலைப்புலிகளை ஒருபோதும் மன்னிக்க முடியாது. அவர்கள் இந்திய சட்டத்தின்கீழ் தண்டிக்கப்படவேண்டும். அவர்களுக்கு உதவிபுரியும் அமைப்புக்களை இனங்கண்டு உதவிகளை நிறுத்தும்படி செய்ய வேண்டும் என்றார். (து)

# எயிட்ஸ் விழிப்புணர்வுப் பிரசாரம்

(சுதுமலை)

கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பிரிவு ரீதியாக எயிட்ஸ் விழிப்புணர்வு பிரசாரம் பாடசாலைகள் ரீதியாக நடைபெற்று வருகின்றது.

இதற்கான ஏற்பாடுகளை வடக்கு கிழக்கு மாகாண எயிட்ஸ் தடுப்பு இயக்க கல்வி உத்தியோகத்தர் சிவலிங்கம் மேற்கொண்டுள்ளார்.

கடந்த வாரம் தொடக்கம் ஆரம்பமான இச்செயற்பாடு கோப்பாய், அச்சுவேலி, புத்தூர், நீர்வேலி, சிறுப்பிட்டி, நல்லூர், கோண்டாவில், கொக்குவில் முதலிய பிரதேசங்களில் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் உள்ள உயர்தர வகுப்பு மாணவர்கள் மத்தியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதாகவும் இதன்மூலம் எதிர்காலத்தில் யாழ்.மாவட்டத்தில் எச்.ஐ.வி தொற்றுக்கு இலக்காவோரின் எண்ணிக்கையை ஓரளவேனும் கட்டுப்படுத்த முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து-252)

# 2006ஆம் ஆண்டுக்கான சிறந்த விவசாயிகள் தெரிவு

(கோண்டாவில்)

2006ஆம் ஆண்டுக்கான சிறந்த விவசாயிகளாக விவசாய போதனாசிரியர் பிரிவு ரீதியாக 41 விவசாயிகளும், மாவட்ட ரீதியாக 8 விவசாயிகளும் தெரிவுசெய்யப்பட்டு விவசாய திணைக்களத்தால் கௌரவிக்கப்படவுள்ளனர்.

விவசாய போதனாசிரியர் பிரிவு ரீதியில்,

மிளகாய் செய்கையில் இரண்டு மெற்றிக்தொன் விளைவைப் பெற்றவர், விவசாய அபிவிருத்தியில் ஈடுபடும் சிறந்த மாதரமைப்பு, சிறந்த பயிர்ச்செய்கை திட்டமிடல் மூலம் வருடம் பூராகவும் செறிவான பயிர்ச்செய்கை மேற்கொள்பவர், சிறந்த பெண் தலைமைத்துவ விவசாயி, திணைக்களத்தின் வழிகாட்டலை மேற்கொள்ளும் முன்னோடி விவசாயி ஆகிய ஐந்து அம்சங்களை அடிப்படையாக கொண்டும்,

மாவட்ட ரீதியாக, வர்த்தக ரீதியில் இரண்டு ஏக்கருக்கு குறையாமல் விளைவைப் பெறும் வாழைச் செய்கையாளர் ஒருவருக்கும் சிறந்த நடுகைப்பொருள் உற்பத்தியாளர், விவசாயம் சார் கைத்தொழில் முயற்சியாளர், சிறந்த சேதனப் பண்ணையாளர், சிறந்த பழமர ஒட்டுனர், திட்டமிடல் மாதிரி வீட்டுத் தோட்ட செய்கையாளர் என்ற அடிப்படையில் தலா ஒருவருக்கும், திராட்சை செய்கையாளர், எலுமிச்சை செய்கையாளர் ஒருவருமாக மொத்தம் எட்டுப்பேர் மாவட்ட ரீதியாக தெரிவு செய்யப்படவுள்ளனர்.

மேற்படி போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் விவசாயிகள் தமது பகுதி விவசாயப் போதனாசிரியர்களிடம் விண்ணப்பங்களைப் பெற்று இம்மாத இறுதிக்குள் மீள ஒப்படைக்குமாறு பிரதி விவசாயப் பணிப்பாளர் து.சிவகுமார் தெரிவித்துள்ளார். (து-36)

## ஆன்மீகச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் ஆன்மீகத் தொடர் சொற்பொழிவு நாளை வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நாவலர் மணிமண்டபத்தில் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள அபிவிருத்தி உதவியாளர் த.பிரதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.


இந்நிகழ்வில் வாழ்த்துரையினை கோப்பாய் சிவசுப்பிரமணிய கோட்ட நிர்வாகி திருமதி சிவலோஜினி கனகரத்தினமும், சிறப்புச் சொற்பொழிவினை 'திருமுறையும் வாழ்வும்' என்னும் தலைப்பில் செல்வி சிவயோகராணியும் நிகழ்த்துவர். (து-133)


## வருடாந்த திருவிழா

(யாழ்ப்பாணம்)

அல்லைப்பிட்டி புனித கார்மேல் அன்னையின் வருடாந்த திருவிழா நாளை வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு திருநாள் திருப்பலியும் திருச்சொரூப தேர்ப்பவனியும் இடம்பெறவுள்ளது. (து)







இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் மாணிக்கவாசகர் குருபூசை தினம் காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. மாணிக்கவாசகரின் திருவுருவப் படத்திற்கு ஈழத்துச் சிதம்பர ஆலய பிரதமகுரு சிவசிறி ஈஸ்வரக்குருக்கள் பூசை வழிபாடு செய்வதனையும், அன்றைய விழாவிற்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட காரைநகர் பிரதேச செயலாளர் ரி.ஜெயசீலன் சிறப்புரையாற்றும் போது மாலையணிவித்து கௌரவிக்கப்படுவதனையும் படங்களில் காணலாம்.

*(படங்கள்: காரைநகர் செய்தியாளர்)*







1985ஆம் ஆண்டு போராட்ட சூழ்நிலையால் தரைமட்டமாகி கைவிடப்பட்ட நிலையிலிருந்து தற்போது யாழ்.மாநகர ஆணையாளரால் துப்புரவு முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ள பழைய யாழ்.மாநகரசபை சுற்றாடலையும், பழைய மாநரசபை முன்றலில் நிறுவப்பட்டு தலைதுண்டிக்கப்பட்ட நிலையில் காணப்படும் சேர் பொன் இராமநாதனது உடைந்து போன உருவச் சிலையை யும் படங்களில் காணலாம்.

*(படங்கள்: திலீவின்பன்)*




## தங்கக் காலணி (கோல்டன் சூ) விருது

ஜேர்மனி உலக கோப்பை தொடரில் அதிக கோல் அடித்த வீரர் ஜெர்மனியை சேர்ந்த மிரோஸ்லாவ் குளோஸ். 7 போட்டிகளில் பங்கேற்ற குளோஸ் 5 கோல்கள் அடித்து முதலிடத்தை கைப்பற்றியுள்ளார். இதன் மூலம் அதிக கோல் அடித்த வீரருக்கு வழங்கப்படும். கோல்டன் சூ விருதை குளோஸ் தட்டிச்சென்றார். சில்வர் சூ விருதை ஆர்ஜென்டினாவின் கிறஸ் போவும், வெண்கல சூ விருதை பிரேசிலின் நட்சத்திர வீரர் ஹொனால்டோவும் கைப் பற்றினர். இதற்குமுன் கோல்டன் சூ விருது வென்றவர்கள்.

| வீரர் | நாடு | கோல் | ஆண்டு |
|---|---|---|---|
| ஓலேக்சாலேன்கா | ரஷ்யா | 6 | 1994 |
| டாவோர் சுகெர் | குரோஷியா | 6 | 1998 |
| ரொனால்டோ | பிரேசில் | 8 | 2002 |

## "லீவ் யாசின்" விருது

ஒவ்வொரு உலககோப்பை தொடரிலும் சிறந்த கோல் கீப்பர் தேர்வு செய்யப்பட்டு அவருக்கு ரஷ்யாவை சேர்ந்த முன்னாள் கோல் கீப்பர் லீவ் யாசின் பெயரில் 'பிபா' விருது வழங்கி கௌரவித்து வருகிறது. இம்முறை இந்த விருதை இத்தாலி கோல் கீப்பர் கியான்லூகி பபுன் பெறுகிறார். 7 போட்டிகளில் விளையாடி உள்ள பபுன் 27 முறை எதிரணி வீரர்களின் கோல் சொட்களை முறியடித்துள்ளார். இதற்கு முன் லீவ் யாசின் விருது வென்றவர்கள்

| வீரர் | நாடு | ஆண்டு |
|---|---|---|
| மைக்கேல் பிரியூடு | பெல்ஜியம் | 1994 |
| பார்த்தாஸ் | பிரான்ஸ் | 1998 |
| ஒலிவர் கான் | ஜேர்மனி | 2002 |

## ஜிடேனை திட்டினேன்

### ஒப்புக்கொண்டார் இத்தாலி வீரர் மற்ரஸி

ஜிடேனை திட்டியதாக மற்ரஸி ஒத்துக் கொண்டுள்ளார். ஆனாலும் ஊடகங்கள் சொல்வது போல், ஜிடேன் குடும்பத்தை பற்றி தவறாக எதுவும் சொல்லவில்லை என விளக்கம் அளித்துள்ளார். மாறாக களத்தில் வீரர்கள் சகஜமாக கூறும் வார்த்தைகளில் தான் திட்டியதாக தெரிவித்துள்ளார்.

ஜேர்மனியில் 18ஆவது உலக கோப்பை



தொடர் நடந்து முடிந்தது. பெர்லினில் நடந்த இறுதிப் போட்டியின்போது பிரான்ஸ் அணித் தலைவர் ஜிடேன் தனது தலையால் இத் தாலியின் மற்ரஸி நெஞ்சில் மூர்க்கத் தனமாக முட்டினார். நிலைகுலைந்த மற்ரஸி தடுமாறி கீழே விழுந்தார்.

இதன் காரணமாக ஆட்டத்தின் 110வது நிமிடத்தில் ஜிடேன், சிவப்பு அட்டை காட்டப் பட்டு வெளி யேற்றப்பட்டார். இது குறித்து இத்தாலி பத்திரிகையான 'லா கெஜட்டா டெல்லோ'வில் மற்ரஸி கூறியதாவது.

ஒருசில வினாடிகள் மட்டுமே ஜிடேனின் சட்டையை நான் இழுத்தேன். அதற்கு அவர் கடும் கோபத்துடன் வெறிபிடித்தவன் போல என்னை பார்த்தார். மேலும் என்னை நோக்கி என்னுடைய சட்டை உனக்கு வேண்டுமா?போட்டி முடிந்தவுடன் வாங்கிக்கொள் என்று கூறிவிட்டு தலையால் என்னை மூர்க்கத்தனமாக தாக்கிவிட்டார்.

பிரான்ஸ் பத்திரிகைகள் சில மற்ரஸி வேண்டும் என்றே ஜிடேனை எரிச்சலுக்கு ஆளாக்கிவிட்டார். என்று செய்தி வெளியிடுகிறார்கள். அப்படி ஒன்றும் நான் செய்து விடவில்லை. உதைபந்தாட்டப் போட்டிகளில் வீரர்கள் ஒருவருக் கொருவர் போட்டியிட் டுக்கொண்டு வெற்றிக்கு போராடுவது வாடிக்கையாக நடக் கக்கூடிய ஒன்று. அந்த சம்பவத்தின் போது ஜிடேனை பார்த்து நான் திட்டியது உண்மை தான் இதை மறுக்க விரும்பவில்லை. ஆனால் அவரை தீவிரவாதி என்று சொல்லவில்லை. அவரது தாயைப் பழிக்கவும் இல்லை தாய் மையின் புனிதம் என்னவென்று எனக்கு தெரி யும்.

பிரேசிலை சேர்ந்த குளோப் என்ற தொலைக்காட்சி, நான் ஜிடேனின் சகோதரி பற்றி தவறாக கூறியதால் தான் அவர் கோப மடைந்தார் என்று கூறியுள்ளது. இப்படி செய்தி வெளியிட்ட குளோப் தொலைக்காட்சி தான் ஜிடேனின் தங்கையை இழிவு படுத்தி யுள்ளது. நான் ஜிடேனின் தாயையோ தங் கையையே இழிவு படுத்தும்படியாக பேச வில்லை. இவ்வாறு மற்ரஸி கூறியுள்ளார்.

*யார் தீவிரவாதி?*

தான் தாக்கப்பட்டது குறித்து மற்ரஸி கூறுகையில் 'ஜிடேனின் செயலில் தீவிர வாதம் மேலோங்கி இருந்தது. எனக்கு தீவிர வாதிகள் பற்றி எல்லாம் ஒன்றும் தெரியாது. எனக்கு தெரிந்த ஒரே குட்டி தீவிரவாதி எனது 10 மாத குழந்தைதான்' என்றார்.

*ஜிடேன் மீது விசாரணை!*

மற்ரஸி விவகாரத்தில்த ஜிடேன் நடத்தை பற்றி சர்வதேச உதைபந்தாட்டக் கூட்ட மைப்பு (பிபா) ஒழுங்கு விசாரணை நடத்த உள்ளது. இதுபற்றி பிபா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

சர்வதேச போட்டிகளில் சிவப்பு அட்டை காட்டி ஒருவர் வெளியேற்றப்படும் போது, அந்த சபம்பவம் பற்றி வழக்கமாக விசாரிக் கப்படும். தவறு செய்த வீரரை கண்டறிந்து தண்டனை வழங்கப்படும்.

இதே போன்று தான் ஜிடேன் நடத்தை பற்றி ஒழுங்கு நட வடிக்கை குழு விசாரணை நடத்தவுள்ளது. இவர் மற்ரஸி நெஞ்சில் முட்டிய போது நிகழ்ந்த சம்பவங்களின் பின்னணி பற்றி விரிவாக ஆய்வு செய்யப் படும்.

## அதிக கோல் அடித்தவர்கள்

இத்தொடரில் அதிக கோல்கள் அடித்த வீரர்கள்:

| வீரர் | நாடு | போட்டி | கோல் |
|---|---|---|---|
| குளோஸ் | ஜேர்மனி | 7 | 5 |
| கிறஸ்போ | அர்ஜென்டினா | 4 | 3 |
| ரொனால்டோ | பிரேசில் | 5 | 3 |
| ஜிடேன் | பிரான்ஸ் | 6 | 3 |
| வில்லா | ஸ்பெயின் | 4 | 3 |
| பெர்னாண்டோ | ஸ்பெயின் | 4 | 3 |
| ரோட்ரிக்ஸ் | அர்ஜென்டினா | 5 | 3 |
| ஹென்றி | பிரான்ஸ் | 7 | 3 |
| பொடோல்ஸ்கி | ஜெர்மனி | 7 | 3 |

## அதிக கோல் ஜேர்மனிக்கே!

இந்த உலக கோப்பை தொடரில் அதிக கோல்கள் அடித்த அணிகள் வரிசையில் ஜேர்மனி முதல் இடத்தில் உள்ளது. 7 போட்டிகளில் விளையாடி உள்ள ஜேர்மனி 13 கோல்கள் அடித்துள்ளது. இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களை முறையே இத்தாலி (12) ஆர்ஜென்டினா (11) அணிகள் கைப்பற்றியுள்ளன. அதிக கோல்கள் அடித்துள்ள அணிகள்.

| அணி | போட்டி | கோல்கள் |
|---|---|---|
| ஜேர்மனி | 7 | 13 |
| இத்தாலி | 7 | 12 |
| அர்ஜென்டினா | 5 | 11 |
| பிரேசில் | 5 | 10 |
| பிரான்ஸ் | 7 | 9 |
| ஸ்பெயின் | 4 | 9 |
| போர்த்துக்கல் | 7 | 7 |
| ஈர்க்குவடார் | 4 | 5 |
| மெக்சிக்கோ | 4 | 5 |
| இங்கிலாந்து | 5 | 5 |

## போர்த்துக்கல் மோசம்

ஜேர்மனி உலக கோப்பை தொடரில் நான்காவது இடம் கைப்பற்றிய போர்த்துக்கல் அணி கால்பந்து விதிமுறைகளை மீறிய அணிகளுள் முதலிடத்தை பெற்றுள்ளது. 7 போட்டிகளில் பங்கேற்ற போர்த்துக்கல் அணியினர் 24 மஞ்சள் அட்டைகளையும் 2 சிவப்பு அட்டையும் பெற்றுள்ளனர்.

## 64 போட்டி; 147 கோல்கள்

அதிக கோல் அடித்த வீரர்:

குளோஸ் (ஜேர்மனி 5 கோல்கள்) இது வரை உலகக்கோப்பையில் அதிக கோல் அடித்த வீரர்:

ரொனால்டோ (பிரேசில் 15 கோல்கள்)

*மின்னல் வேக கோல்:*

கார்லோஜ் கமாரா (பராகுவே, 4வது நிமிடம்)

*ரசிகர்கள்:*

33 இலட்சத்து அறுபதாயிரம்

*ரிக்கார்டோ சாதனை:*

பெனால்டி 'ஷூட் அவுட்' ல் மூன்று கோல்கள் தடுத்த முதல் கோல் கீப்பர் என்ற சாதனையை இங்கிலாந்துக்கு எதிரான போட்டியில் போர்த்துக்கலின் ரிக்கார்டோ நிகழ்த்தினார்.

*முதலும் கடைசியும்:*

முதல் மற்றும் இறுதிப் போட்டிக்கு முதன் முறையாக நடுவராக பணியாற்றியவர் என்ற பெருமையை ஆர்ஜென்டினாவின் எலி சாண்டோ பெற்றார்.

அமிர்தன்

## நாடு திரும்பிய சம்பியன் இத்தாலியை

## 10 இலட்சம் பேர் கலந்துகொண்டு உற்சாக வரவேற்பு


உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் சம்பியன் பட்டம் வென்ற இத்தாலி அணிக்கு ரோம் நகரில் உற்சாக வரவேற்பு அளிக்கப் பட்டது. இதில் 10 இலட்சம் ரசிகர்கள் கலந்து கொண்டனர். 32 அணிகள் பங்கேற்ற 18வது உலக கோப்பை உதைபந்தாட்டப் போட்டி ஜேர்மனியில் நடந்தது. இதன் இறுதி ஆட்டத்தில் பிரான்ஸ் அணியை பெனால்டி ஷூட் அவுட்டில் 5-3 என்ற கோல் கணக்கில் இத்தாலி அணி தோற்கடித்து 4-வது முறை சம்பியன் பட்டத்தை வென்றது.

இந்நிலையில் சம்பியன் பட்டத்துடன் இத் தாலி அணி நாடு திரும்பியது. இத்தாலி தலை நகர் ரோம் விமான நிலையத்தை சென்றடைந்த அந்த அணியினருக்கு உற் சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. வீரர்கள் விமானத்தில் இருந்து கீழே இறங்கியபோது விமான சாகசங்கள் செய்து காட்டப்பட்டன. வரவேற்பு விழா நிகழ்ச்சியில் இத்தாலி நாட்டு பிரதமர் ரொமனோ புரோடி, விளையாட்டுத் துறை அமைச்சர் ஜியோவன்னா மெலாண்ட்ரி ஆகியோர் கலந்து கொண்டு வீரர்களை வரவேற்றனர். பின்னர் வீரர்கள் திறந்த பஸ்ஸில் நகரை உலா வந்தனர். மொத்தத்தில் இந்த நிகழ்ச்சியில் 10 இலட்சம் பேர் கலந்து கொண்டனர். அதேபோல் இறுதிப் போட்டியில் இத்தாலியிடம் தோல்வி கண்ட பிரான்ஸ் அணியும் தாயகம் திரும்பியது. அந்த அணியினருக்கும் விமான நிலையத்தில் சிறப்பான வர வேற்பு அளிக்கப்பட்டது.

# கர்மவீரர் காமராஜர்

## மீள்பார்வை 24

முருக-தனுஷ்கோடி



*பிரகாசம் முதல் மந்திரியானார்*

ராஜாஜி கோஷ்டியினர் நடுநிலைமை வகிக்காமல் பிரகாசத்துக்கு எதிராக ஓட்டு அளித்திருந்தால் முத்து ரங்க முதலியாரே வெற்றி பெற்றிருப்பார். ராஜாஜி கோஷ்டியினர் நடுநிலைமை வகித்தார்கள் அல்லவா? அவர்கள் மொத்தம் 33 பேர் ஆவார்கள் . கடைசியில் காந்திஜிக்கு எதிராக 33 பேர்களும் நடந்து பிரகாசத்தின் வெற்றிக்கு வழிதேடிக் கொடுத்தனர்.

பிரகாசம் மந்திரிசபைக்கு ஆதரவு தரவேண்டாம். அதற்கு எந்தவித ஒத்துழைப்பும் தரவேண்டாம் என்று காமராஜிடம் பலர் கூறினார்கள் . அதைக் காமராஜ் நிராகரித்து விட்டார். தேர்தல் நடந்து முடிந்துவிட்டது. இனிமேலும் சண்டை சச்சரவுகளை வளர்ப்பது காங்கிரஸ் ஸ்தாபனத்துக்கு நல்லதல்ல என்று அவர்களுக்குக் காமராஜ் பதிலளித்தார்.

மந்திரி சபையில் காமராஜ் கோஷ்டியைச் சேர்ந்தவர்களும் மந்திரிகளாக இருந்தனர் .மாதவ மேனனை மந்திரி சபையில் சேர்த்துக்கொள்ளும்படி பிரகாசத்திடம் காமராஜ் கேட்டார். ஆனால் பிரகாசமோ ராஜாஜி கோஷ்டியைச் சேர்ந்த மந்திரியை கவிழ்ப்பதற்கு இதுவும் ஒரு காரணமாக இருந்தது.

பிரகாசம் மந்திரிசபையைக் கவிழ்க்கக் காமராஜ் எந்த நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை டெல்லியில் உள்ள ராஜாஜி வீட்டில் பிரகாசம் மந்திரிசபையைக் கவிழ்ப்பதற்கு யோசனை நடத்த ஒரு கூட்டம் நடந்தது. பிரகாசத்தின் மீது நம்பிக்கை இல்லாத தீர்மானம் கொண்டுவருவது என்று முடிவு செய்யப்பட்டது. பிரகாசத்திற்குப் பிறகு யாரை முதல் மந்திரியாகப் போடுவது என்ற பரபரப்பு கட்சியில் ஏற்பட்டது. ஓ.பி.ராமசாமி ரெட்டியாரின் பெயரை ராஜாஜி கூறினார்.

விவகாரம் இப்படி வளர்ந்து நம்பிக்கையில்லாத் தீர்மானம் வரை வந்த பிறகு சமரசப் பேச்சும் நடந்தது. சமரசப் பேச்சுக்காக டெல்லியில் இருந்து ஆச்சார்ய கிருபளானி சென்னைக்கு வந்தார்.

யாரை வேண்டுமானாலும் மந்திரியாகப் போட்டுக்கொள்ளுங்கள் . என்னை முதல் மந்திரியாக இருக்க அனுமதியுங்கள் என்றார் பிரகாசம். காமராஜ் ஒருவரைத் தவிர மற்ற எல்லோரும் இதற்குச் சம்மதம் தெரிவித்தனர். என்னுடைய சமரசத்தை எதிர்க்கும் ஒரே ஆள் நீங்கள் தான் என்று காம ராஜிடம் கிருபளானி நேரிடையாகவே சொன்னார் . காமராஜ் தனது முடிவை மாற்றிக் கொள்ளவில்லை. இதைத் தொடர்ந்து கட்சிக் கூட்டத்தில் பிரகாசம் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டது.

நம்பிக்கையில்லாத் தீர்மானமும் நிறைவேறியது. பிரகாசமும் வெளியேறினார் . ஆந்திரமும், மலபாரும் சென்னையோடு இருந்தபோது நடந்த நிகழ்ச்சிகள் இவை.

*உச்சகட்டம்*

காமராஜ் வகித்துவந்த தமிழ்நாடு காங்கிரஸ் தலைமைப்பதவி பலர் கண்களைத் தொடர்ந்து உறுத்திக்கொண்டே வந்தது. அதை எப்படியாவது பிடுங்கிவிட வேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டு அவர்கள் வேலை செய்தனர்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தேர்தல் 1946ஆம் ஆண்டு மே 16 ஆம் திகதி நடைபெற்றது. காமராஜைத் தோற்கடிக்கப் பலவித யோசனைகளில் ராஜாஜி கோஷ்டியினர் ஈடுபட்டனர் . திருப்பரங்குன்றத்தில் ராஜாஜியை எதிர்த்து நின்ற ஒருவரை காமராஜுக்கு எதிராகப் போடுவது என ராஜாஜி கோஷ்டியினர் முடிவு செய்தனர். காரமராஜை எதிர்த்துப் போட்டியிடும் படி முத்துராமலிங்கத் தேவரை வேண்டினர். ஆனால் அவர் அதற்கு மறுத்துவிட்டார்.

கடைசியில் காரைக்குக்குடி சா.கணேசனை நிறுத்துவதென முடிவு செய்தனர். காமராஜை எதிர்த்து சா.கணேசன் போட்டியிடமாட்டார் என்றே பலர் கூறினார்கள். சா.கணேசன் போட்டியிடச் சம்மதித்தது பெரிய அதிசயம்தான் என்ற கருத்துக்கூட அப்போது நிலவியது.

சா.கணேசனை ராஜாஜி கோஷ்டியினர் கூண்டோடு ஆதரித்தனர். தேர்தல் நடந்தது. 62 ஓட்டு வித்தியாசத்தில் வெற்றி பெற்ற காமராஜ் மீண்டும் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

90 ஓட்டுக்களே பெற்றுத் தோல்வியடைந்த சா. கணேசனைப் பற்றிக் காமராஜ் ராஜாஜியிடம் நேரில் ஒரு கேள்வி கேட்டார். அதற்கு அவரும் சிரித்துக்கொண்டே பதில் அளித்தார்.

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் தேர்தலில் வெற்றி பெற முடியாது என்று நன்றாகத் தெரிந்து கொண்ட பிறகும் சா.கணேசனை நீங்கள் ஏன் நிறுத்தினீர்கள் என்று கேட்டார் காமராஜ்.

உங்களை எதிர்த்துப் போட்டியிட வேறு ஆள் கிடைக்கவில்லை. சா. கணேசனுக்குத்தான் இதில் என்ன நஷ்டம் வந்துவிடப்போகிறது. வெற்றி அடைந்தால் இலாபம், தோல்வியடைந்தால் நஷ்டப்பட என்ன இருக்கிறது என்று ராஜாஜி சிரித்துக்கொண்டே கூறினார்.

1945ஆம் ஆண்டு திருப்பரங்குன்றம் காங்கிரஸ் ஊழியர் மாநாடு -1946இல் ராஜாஜி முதல் மந்திரியாக வரமுடியாமல் போனது. ராஜாஜி எத்தனையோ தடுப்பு வேலைகளில் ஈடுபட்டும் அதையும் மீறி காமராஜ் தமிழ் நாடு காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது- பிரகாசம் மந்திரி சபை கவிழ்ந்தது. ஆகியவை காமராஜின் ஒளியமயமான எதிர்காலத்துக்கு வித்திட்டது என்று சொன்னால் அது மிகையாகாது.

## 17.தொழிலாளர் பிரிவு

1942 ஆகஸ்ட் புரட்சிக்கு முன்பு அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸ் எல்லா அரசியல் வாதிகளுடைய ஆதரவையும் பெற்றிருந்தது. தொழிற்சங்க இயக்கத்தில் ஈடுபட்ட காங்கிரஸ் வாதிகள் அகில இந்திய தொழிற்சங்க இயக்கத்தில் ஈடுபட்டார்கள். அதை இந்திய விடுதலைப் போராட்டத்தின் ஒரு பாகமாகவே கருதி வந்தார்கள்.

தலைவர்கள் வி.வி.கிரி, கோவை என்.ஜி.ராமசாமி போன்றவர்கள் காங்கிரஸ் ஸ்தாபனத்திலும் தொழிற்சங்க இயக்கத்திலும் முழுமூச்சுடன் பங்கு கொண்டார்கள் .பட்டாளிகளின் வறுமையைப் போக்க ஒரு ஆயுதம் சுதந்திரம்.ஆகவே அவர்கள் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட வேண்டும் ; ஒத்துழைக்க வேண்டும் என அவர்கள் நம்பினார்கள்.

1942வது ஆண் டு இயக்கத்தின் போது அகில இந்தியத் தொழிற்சங்க காங்கிரஸின் கீழ் இருந்த சங்கங்களில் ஒரு திருப்பம் ஏற்பட்டது.

அதுவரை எந்தெந்த விடுதலை இயக்கங்களை காங்கிரஸ் ஸ்தாபனம் ஆரம்பித்தாலும் அவைகளுக்கு ஆதரவு கொடுத்துவந்த மேற்படி ஸ்தாபனம் "மக்கள் யுத்தம்" என்ற கோஷத்தை எழுப்பி விடுதலை இயக்கத்துக்குத் தொழிலாளர் ஆதரவை மறுத்துவிட்டது. சில தொழிற்சங்கங்கள் விடுதலை இயக்கத்தைக் குறை கூறவும் அவற்றை ஐந்தாம் படைவேலை என்று பழிக்கவும் தொடங்கின.

(தொடரும்)

# விண்ணப்பதிகதி நீடிப்பு

(கொழும்பு)

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு சிறுவர்களின் திறன்களை விருத்தி செய்வதற்காக நடத்தப்படவுள்ள தேசிய மட்டப் போட்டிகளுக்கான விண்ணப்ப முடிவுத் திகதி நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பலரின் வேண்டுகோளுக்கிணங்க இப் போட்டிக்கான விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் 15ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக சிறுவர் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டப் பணிப்பாளர் ரட்ணா புஸ்பகுமாரி தெரிவித்துள்ளார்.

இவ் வருடத்திற்கான போட்டிகள் 3 வயதுப் பிரிவினருக்கிடையே நடத்தப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.இது தொடர்பான மேலதிக விபரங்களை பெற விரும்புவோர் சிறுவர் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம், இலக்கம் 51, ஸ்ரீதர்மராம வீதி, கொழும்பு - 9 என்ற முகவரியில் அல்லது தொலைபேசி இலக்கம் 0112672718 /0112689526 உடன் தொடர்பு கொள்ள முடியுமென அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (து-7)

# பொது சுகாதாரப் பரிசோதகர் நியமனம்

(சுதுமலை)

யாழ். மாவட்டத்தில் உள்ள நான்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் கடந்த முதலாம் திகதி தொடக்கம் புதிய மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களை வடக்கு-கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் நியமனம் செய்துள்ளார்.

அந்த வகையில் தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு எஸ். திவ்வியகுமாரனும், கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு ந.சிவபாலனும், சங்கானை-மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு எஸ்.தெய்வேந்தியும், சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு தி.கிளிண்டஸூம் மேற்பார்வை பொது சுகாதாரப் பரிசோதகர்களாக நியமனம் பெற்றுள்ளார்கள்.

அத்துடன் யாழ். மாவட்டத்தில் மலேரியா தடை இயக்கப் பொதுச் சுகாதாரப் பரிசோதகராக வரணியில் கடமை புரிந்த செ.நாகேந்திரம், விலங்கு விசர்நோய் தடுப்பு இயக்கப் பொதுச் சுகாதாரப் பரிசோதகராக மானிப்பாயில் கடமை புரிந்த கே.வர்ணநாதன் ஆகியோரும் புதிதாக நேர்முகப் பரீட்சையின் பிரகாரம் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.(து-252)

# உணவுச் சாலைகளை பதிவுசெய்ய புதிய சட்டங்கள் அறிமுகம்

(கொழும்பு)

உணவுச்சாலைகளை பதிவு செய்வதற்கான புதிய சட்டங்கள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.தரமான உணவுப் பொருட்களைத் தயாரிக்கும் பொருட்டு வர்த்தகர்களை ஊக்குவிப்பதே இதன் முக்கிய நோக்கமாகும் என சுகாதார அமைச்சின் உணவுக் கட்டுப்பாட்டாளர் தெரிவித்துள்ளார்.

இந்த புதிய சட்டங்களுக்கமைய கண்ணாடிப் பெட்டிகளில் வைக்கப்பட்டிருக்கும் உணவுப் பண்டங்களுக்கான வெப்பநிலை 60 சென்ரிகிரேற் ஆக இருத்தல் வேண்டும்.

இதேவேளை, குளிரூட்டிகளில் இருக்கும் பண்டங்களுக்கான வெப்பநிலை 4சென்ரிகிரேற் ஆக இருத்தல் வேண்டும். இந்த நடைமுறைகளைக் கடைப்பிடிக்காத வர்த்தகர்கள் பதிவு செய்யப்படமாட்டார்கள். மேற்குறிப்பிட்டபடி உணவுப் பண்டங்களை பராமரிக்கத் தவறும் பட்சத்தில் உணவு நஞ்சாகி பாரிய உடல் பாதிப்புக்களை எதிர்நோக்கியிருக்கும் எனவும் சுகாதார அமைச்சின் உணவுக் கட்டுப்பாட்டாளர் மேலும் தெரிவித்துள்ளார். (தி)

# பிரதேச செயலர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரல்

(கொழும்பு)

மாவட்டங்களில் நிலவும் பிரதேச செயலாளர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக தற்போது சேவையில் உள்ள இலங்கை நிர்வாக சேவையின் அலுவலர்களிடமிருந்து அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை , மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்கள் உட்பட 21 மாவட்டங்களில் பிரதேச செயலாளர்களுக்கான பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு I மற்றும் தரம் II/I ஐச் சேர்ந்தவர்களாக இருக்கவேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சேவை முதுமுறைப் பிரதேச நிர்வாகத்தில் உள்ள அனுபவம், தொடர்பாடல் திறமைகள், ஆக்கத்திறன் தொடங்கும் வாய்ப்பு, வள ஆற்றல் என்பவற்றில் கவனம் செலுத்தப்பட்டு நியமனங்கள் வழங்கப்படுமென அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

மேலும் பிரதேச செயலாளர்களாக நியமனம் செய்யப்படும் அலுவலர்களுக்கு பல வசதி வாய்ப்புகள் செய்து கொடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்கள் யாவும் அமைச்சின் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்டு பூர்த்தி செய்து இம்மாதம் எதிர்வரும் 28ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர், அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு , சுதந்திர சதுக்கம் , கொழும்பு-07 என்ற முகவரிக்கு அனுப்பப்படுதல் வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (து-7)

# இ.போ.ச. ஊழியர் மீது இராணுவம் தாக்குதல்

(துன்னாலை)

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை சாலையில் பணிபுரியும் பேருந்துச் சாரதி ஒருவர் கடமையில் இருந்தவேளை நேற்று முன்தினம் வரணி சுட்டிபுரம் அம்மன் [illegible] பகுதியில் வைத்து இராணுவத்தினரால் கடுமையாகத் தாக்கப்[illegible]

துன்னாலை கிழக்கைச் சே[illegible] தியே தாக்குதலுக்குள்ளான[illegible] ளான சாரதி அச்சுறுத்தல்கார[illegible] வில்லை என சம்பந்தப்பட்ட சாரதி [illegible]

இதேவேளை, வரணி மற்றும் [illegible] முன்தினம் மேலும் பலர் இரா[illegible] வும் அறியப்படுகிறது.

மும்பை குண்டுவெடிப்பு

# பலியானோரின் தொகை 190 ஆக அதிகரிப்பு!

இந்தியாவின் மும்பை நகரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தில் பலியானோரின் எண்ணிக்கை 190 ஆக அதிகரித்துள்ளது. 625 பேர் காயமடைந்துள்ளனர். இந்த குண்டு வெடிப்புத் தாக்குதல்கள் நேற்று முன்தினம் 6 மணிமுதல் தொடர்ச்சியாக 7 இடங்களில் மேற்கொள்ளப்பட்டன.

முதல் குண்டு வெடிப்புச் சம்பவம் பயணித்துக்கொண்டிருந்த தொடரூந்தில் இடம்பெற்ற அதேநேரம் ஏனைய குண்டு வெடிப்புக்கள் தொடரூந்து மையங்களிலும் வேறு இடங்களிலும் இடம்பெற்றன.

குண்டுத்தாக்குதலை அடுத்து இந்தியாவின் அனைத்துப் பகுதிகளிலும் பாதுகாப்புக்கள் பலப்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக தொடரூந்து மையங்களின் பாதுகாப்புக்கள் பலப்படுத்தப்பட்டுள்ளன. புதுடில்லியில் பிரதமர் மன்மோகன் சிங் பாதுகாப்பு அதிகாரிகளுடன் அவசர சந்திப்புக்களை நடத்தியுள்ளார்.

இந்தத் தாக்குதல்களுக்கு யார் பொறுப்பு என கண்டறிய விசாரணைகள் தீவிரமாக நடைபெறுவதாக தெரிவித்துள்ள இந்திய பாதுகாப்பு தரப்புக்கள் குற்றவாளிகள் தப்பிக்க முடியாது என்றும் தெரிவித்துள்ளனர். (த,7,9)

WORLD NEWS உலக தரிசனம்

# காஸா பகுதியில் விமானத்தாக்குதல்

காஸா பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதலில் 5 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர். 3 குழந்தைகள் உட்பட 5 பேர் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

காஸாவில் உள்ள பலஸ்தீன ஹமாஸ் ஆயுததாரிகளை இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதலிலேயே இவர்கள் கொல்லப்பட்டதாக கூறப்படுகிறது. 3 மாடி கட்டடம் ஒன்றின் மீது விமான தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதால் அதிலிருந்து 5 பேரும் கொல்லப்பட்டுள்ளனர். (த-7)

# மினிபஸ்மீது துப்பாக்கிச் சூடு பயணிகள் 10 பேர் பலி!

(பக்தாத்)

ஈராக்கிய தலைநகரான பக்தாத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மினி பஸ்ஸொன்றின் மீது துப்பாக்கிதாரிகள் சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் பத்துப்பேர் கொல்லப்பட்டனர்.

இவர்கள் தென்நகரான ரஜாப்பில் இடம்பெற்ற மரணச் சடங்கொன்றில் பங்கு பற்றிவிட்டு திரும்பியவர்களாவர். இவர்கள் அனைவரும் ஷியா முஸ்லிம்கள்.

பக்தாத்தின் தென் பகுதியிலுள்ள நெடுஞ்சாலையில் இம் மினி பஸ் வந்துகொண்டிருந்தது. அப்போது அதனருகில் விரைந்துவந்த இரு கார்களிலிருந்து துப்பாக்கிதாரிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

துப்பாக்கிச் சன்னங்களால் மினி பஸ் துளைக்கப்பட்டது அதில் பயணித்த அனைவரும் கொல்லப்பட்டனர். இதேவேளை மத்திய பக்தாத்திலுள்ள அதி உயர் பாதுகாப்பு வலயமான கிரீன் ஷோனுக்கு வெளியே நேற்று முன்தினம் குண்டொன்று வெடித்தது இதில் ஐவர் கொல்லப்பட்டனர். பத்துப் பேர் காயமடைந்தனர்.

அந்த அதி உயர் பாதுகாப்பு வலயத்தில் தான் அமெரிக்க இராணுவத் தலைமையகம், அமெரிக்க பிரிட்டிஸ் தூதரகங்கள், ஈராக்கிய அரசாங்க கட்டடங்கள் ஆகியவை அமைந்துள்ளன.

சமீபகாலமாக ஈராக்கில் இரு மதப் பிரிவினருக்கிடையிலான மோதல்கள் விரிவடைந்துள்ளன. கடந்த மூன்று தினங்களாக மோதல்கள் உக்கிரமடைந்துள்ளன. ஈராக்கில் வெளிவிவகார அமைச்சின் அதிகாரியும், ஈரானுக்கான முன்னாள் இராஜதந்திரியுமான வைஸம் ஜபர் பக்தாத்தில் துப்பாக்கிதாரிகளால் கடத்தப்பட்டார்.

தென் பக்தாத்தின் புறநகர் பகுதியான அமிலில் செவ்வாய்கிழமை அதிகாலை இந்த அதிகாரியின் கார், பல கார்களில் வந்த துப்பாக்கிதாரிகளால் தடுத்து நிறுத்தப்பட்டு அந்த அதிகாரி கடத்தப்பட்டுள்ளார். (த-7)

# பாகிஸ்தானில் தேடுதல் வேட்டை 21 தீவிரவாதிகள் பலியாகினர்

(இஸ்லாமாபாத்)

தென்மேற்கு பாகிஸ்தான் மாகாணத்தில் பாகிஸ்தான் பாதுகாப்புப் படைகள் திடீர் தேடுதல் வேட்டையை மேற்கொண்டன. இதில் 21 தீவிரவாதிகள் கொல்லப்பட்டார்கள். இவர்கள் பழக்குடிகளைச் சேர்ந்தவர்களாவர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

துருப்புக்களுக்கு அனுசரணையாக விமானப்படை ஹெலிகொப்டர்கள் செயல்பட்டன. தேராபஹ்தி மாவட்டத்திலுள்ள ஷாங்சில்லா, பம்பூரி ஆகிய பகுதிகளில் கடந்த சனிக்கிழமை ஆரம்பமான இத் திடீர் தேடுதல் வேட்டை ஞாயிற்றுக்கிழமையும் தொடர்ந்தது என்றும் அவ்வதிகாரிகள் கூறினார்கள்.

இத் தேடுதல் வேட்டையில் 21 தீவிரவாதிகள் கொல்லப்பட்டார்கள். 13 பேர் காயமடைந்தனர் கடந்த வாரமும் இதே பகுதியில் குறைந்தபட்சம் 25 தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளார்கள் என மாகாண அரசாங்க பேச்சாளர் ராசீக் பஹ்தி ரொய்ட்டருக்குத் தெரிவித்தார்.

இத் தேடுதல் வேட்டையின் போது தீவிரவாதிகளின் ஏழு பயிற்சி முகாம்கள் நிர் மூலமாக்கப்பட்டன. 50 தீவிரவாதிகள் பாதுகாப்பு படைகளிடம் சரணடைந்தனர் என பாதுகாப்பு அதிகாரியொருவர் தெரிவித்தார். பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் பல்வேறு கனியவளங்கள் உள்ளன. எரிவாயு சேமிப்பு நிலையங்கள் இருக்கின்றன. இங்குள்ள பழங்குடி தீவிரவாதிகள் கூடுதலான சுய நிர்ணய உரிமை கோரியும் பெருமளவிலான மூலவளங்கள் தம் கட்டுப்பாட்டுக்குள் இருக்க வேண்டுமெனக் கோரியும் போராடி வருகிறார்கள்.


இவர்கள் தம் கோரிக்கைகளுக்கு அழுத்தம் கொடுப்பதற்காக ரயில் பாதைகள், எரிவாயு குழாய்கள், மின்சார நிலையங்கள், அரசாங்கக் கட்டடங்கள் ஆகியவற்றை குண்டுத் தாக்குதல்களால் தகர்த்து வருகிறார்கள். இராணுவ காவல் அரண்கள் மீதும் தாக்குதல் நடாத்தி வருகின்றார்கள்.

இம் மாகாணத்திலுள்ள எண்ணெய், எரிவாயு ஆகியவற்றால் திரட்டப்படும் நிதி, ஏனைய மாகாணங்களின் அபிவிருத்திக்காக அரசாங்கத்தால் செலவிடப்படுகின்றது. இம் மாகாணம் சுரண்டப்பட்டும் புறக்கணிக்கப்பட்டும் வருகிறது என்றும் இத் தீவிரவாதிகள் புகாரிட்டு வருகிறார்கள். (த-7)

# இறுதிக் கட்டத்தை அடைந்தது சதாமின் வழக்கு விசாரணை

(பக்தாத்)

ஈராக்கின் முன்னாள் சர்வாதிகாரி சதாம்



உசேன் மீது தொடரப்பட்ட சித்திரவதை வழக்கு இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளது. கடந்த திங்கட்கிழமை சதாமின் வக்கீல்கள் தங்கள் தரப்பு விவாதத்தை முடித்து வைத்துப் பேசினர்.

1982ஆம் ஆண்டு ஷியா முஸ்லிம்கள் சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டதில் சதாம் உசேனுக்கு எந்தப் பங்கும் இல்லை என்று அவர்கள் வாதம் செய்தனர்.

சதாம் உசேனின் பிரதான வக்கீல்கள் திங்கட்கிழமை நீதி மன்றில் ஆஜராக வில்லை. அவர்கள் தங்களின் சகா கொல்லப்பட்டதை எதிர்த்து புறக்கணிப்பு செய்தனரா என்பது தெரியவில்லை. சதாமின் வக்கீல் கொல்லப்பட்டதற்கு தலைமை நீதிபதி ரவூப் அப்துல் ரகிமான் அனுதாபம் தெரிவித்தார். (த)

# குளோரின் வாயுக்கசிவால் 164 பேர் மருத்துவமனையில்

(பீஜிங்)

சீனாவில் மங்கோலியா அருகே உள்ள நிங்ஷியா ஹுய் மாநிலத் தலைநகர் யின் சுவான்னிலவில் உள்ள ஒரு இரசாயன தொழிற்சாலையில் துருப்பிடித்த குழாயில் இருந்து குளோரின் வாயு கசிந்தது. இதில் அங்கு வேலை செய்த 164பேர் பாதிக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

வாயுக் கசிவு என்பது சீனாவில் வழக்கமான ஒன்று ஆகும். கடந்த 2003ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடந்த விஷவாயு கசிவில் 243 பேர் பலியானார்கள். (த)



நான்கு கோரிக்கைகளை முன்வைத்து நேற்றைய தினம் பகல் 12.30 மணிக்கு யாழ்.நீதிமன்ற ஊழியர்கள் மேற்கொண்ட அரைமணி நேரப்பணிப்புறக்கணிப்பின் போது....



விவாதத்தில் எல்லோருமே குறைகளை எடுத்துக் கூறலாம். கொள்கை பற்றித் தீர்மானித்து விட்டால் குறை கூறுவதும் தவறுகளை கண்டு பிடிப்பதும் சுலபம்.

-இராஜாஜி

வலம்புரி

# ஆலாவர்ணம் மிக்க ஜனாதிபதியின் உரை

மக்களின் எதிர்பார்ப்புக்கு அமையவே தீர்வுத் திட்டம் இருக்கவேண்டுமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற அனைத்துக்கட்சிப் பிரதிநிதிகளின் ஆலோசனைக்கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அனைத்துக்கட்சி பிரதிநிதிகளில் கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி முக்கிய விடயங்களை சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும் அவரின் உரையில் மறைமுகமான கருத்தாடல் இருப்பதையும் மறுத்துவிடமுடியாது. மக்களின் அபிலாசைகளை -எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றக்கூடியதாக தீர்வுத்திட்டம் இருக்க வேண்டுமெனக்கூறிய அவர்,

வடக்கு கிழக்கிலோ அன்றி நாட்டின் ஏனைய பகுதிகளிலோ பிரச்சினைகளால் மக்களின் இயல்பு வாழ்க்கை நீண்டகாலமாக திரும்பாதிருப்பதை நியாயப்படுத்த முடியாது என்றும் கூறியுள்ளார்.

இனப்பிரச்சினை இத்தனை தூரம் வியாபிப்பதற்கு கடந்த கால ஆட்சியாளர்களே காரணம் எனக்கூறும் ஜனாதிபதி,

தீர்வுத்திட்டம் மிகக்குறுகிய காலத்தில் முன் வைக்கப்படவேண்டுமென்றும் உறுதிபடத்தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் இருக்கக்கூடிய அதே யுத்தி தற்போதைய ஜனாதிபதியிடமும் இருக்கிறது என்பதை அவரின் மேற்போந்த உரை உறுதிசெய்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதியும் தனது உரைகளில் இனப்பிரச்சினையை தீர்க்கவேண்டும் ,தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழ வேண்டுமென அழகுபடக்கூறிக் கொள்வார்.

அவரின் உரையை கேட்பவர்கள் அட! இவரல்லவோ நாட்டின் சிறந்த தலைவர் என்று கருதிக் கொள்வர். இவ்விதம் பேச்சில் பல்லக்கில் செல்லும் பாணி அவரை இரு தடவைகள் நாட்டின் ஜனாதிபதியாக்கியது.

தற்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் அதே பாணியைக் கடைப்பிடிக்கிறார். அவர் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவை விட ஒரு படி மேலே சென்று ஐக்கிய தேசியக்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களையும் தனது பக்கம் இழுத்தெடுக்கும் வகையில் மிக நுட்பமாக பேசி வருகின்றார்.

இவ் விதம் பேசுவதன் ஊடாக நாட்டு மக்களை வசப்படுத்தலாம் என்பதையும் அரசில்வாதிகளையும் தம் வசப்படுத்த முடியும் என்பதையும் ஜனாதிபதி மகிந்த கற்றுள்ளார்.

என்ன செய்வது ? ஐயா ! ஜனாதிபதி அவர்களே ! விடுதலைப்புலிகளுடன் அரசு செய்து கொண்ட பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கையை தாங்கள் பிரதமராக இருந்தபோது ஏன் எதிர்த்தீர்கள்?

அப்போதெல்லாம் இனப்பிரச்சினை தீர வேண்டுமென தாங்கள் நினைக்கவில்லையா? என்று அவரிடம் துணிந்து கேட்பதற்கு யார் உளர்? .

# வறிய குடும்பங்களைச் சேர்ந்த உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு விஷேட புலமைப்பரிசில் கொடுப்பனவு

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதர உயர்தர வகுப்பில் கல்வி கற்கும் வருமானம் குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு ஜனாதிபதி நிதியத்தில் இருந்து விஷேட புலமைப் பரிசில் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளதாக ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் 2005ஆம் ஆண்டு நடைபெற்ற சாதாரணதரப் பரீட்சைக்கு முதற்தடவையாக தோற்றி தற்போது உயர்தர வகுப்புக்களில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு இக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளதாகவும் ஜனாதிபதியின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

விண்ணப்ப தாரர்களின் குடும்பமாதாந்த வருமானம் ஐயாயிரம் ரூபாவுக்கு உட்பட்டதாக அமைவதுடன் 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் கொடுப்பனவை பெறுபவராக இருக் கக் கூடாது என்றும் அவர் அறிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கு மாகாணம் உட்பட நாட்டின் அனைத்து பிரதேச கல்வி வலயங்களிலிருந்தும் தலா 100 மாணவர் கள் வீதம் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு மாதாந்தம் 500ரூபா வீதம் 24 மாதங்களுக்கும் புலமைப்பரிசில் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

இது தொடர்பான விண்ணப்பப் படிவங்களை இம் மாதம் 27ஆம் திகதிக்கு முன்னர் அதிபரின் சிபாரிசுடன் வலயக் கல்விப் பணிமனைகளில் ஒப்படைக்குமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

(கு-7)

# அழிவை நோக்கிச் செல்லும் வரலாற்றுப் பொக்கிஷங்கள்

(நல்லூர்)

யாழ்ப்பாண இராசதானியின் இறுதி கடைசி மன்னான சங்கிலியனால் அமைக்கப்பட்டதாக கூறப்படும் சங்கிலியன் அரண்மனை, மந்திரிமனை என்பன கவனிப்பாராற்று பழுதடைந்து வருகின்றன. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மு.சிவசிதம்பரம் நல்லூர் தொகுதியின் உறுப்பினராக முதன் முதலாக பாராளுமன்றத்திற்கு தெரிவுசெய்யப்பட்ட காலத்தில் அவர் சங்கிலியன் அரன்மனையின் முகப்பு வாயிலுக்குமேல் கூரைஅமைப்பித்தார்.

அதன்பின்னர் நீண்ட காலமாக கட்டடத்தை பாதுகாப்பதற்கோ அல்லது புனரமைப்பதற்கோ எந்தவிதமான நடவடிக்கைகளும் எவராலும் மேற்கொள்ளப்பட்டதாக தெரியவில்லை.

இவ்வாயிலானது பருத்தித்துறை வீதியில் அமைந்திருப்பதனால் கனரக வாகனப்போக்குவரத்துக்கள் ,அவற்றின் அதிர்வுகளால் இடிந்துவிழக்கூடிய அபாயம் உள்ளது செட்டியார் தோட்டம் என அழைக்கப்படும் சங்கிலியன் மன்னனது அரண்மனை அமைந்திருந்திருந்ததென அழைக்கப்படும் காணியில் காலம் காலமாக ஏற்பட்ட மக்கள் குடியிருப்புக்களால் அத்தோட்டத்தின் வரலாற்றுச் சிறப்புக்களை எதிர் கால சந்ததியினர் அறியவாய்ப்பில்லாமல் போய் விட்டது.

மந்திரிமனை வளவு வேலிகள் அற்ற நிலையில் கவனிப்பார் அற்றுள்ளது. மந்திரிமனைவளவு என்று பெயர் பலகைக்கூட அமைக்கப்படவில்லை. கதிர்காமம், மகியங்கனை, அநுராதபுரம் ஆகிய இடங்கள் புனித நகரங்கள் ஆக்கப்பட்டு புனரமைக்கப்படுவதுபோல் யாழ்ப்பாண இராச்சியத்தின் கடைசித்தலைநகரான நல்லூர் புனித நகராக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்படவில்லை.

இதனால் தமிழ் மக்களின் வரலாற்றுப் பொக்கிசங்களான சங்கிலியன் அரண்மனை, மந்திரி மனை போன்றன அழிவடையும் நிலைக்கு செல் கின்றன. இந்நிலைமை போக்குவதற்கு யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் , வரலாற்று தொல்பொருள் துறை யினர் முன்வரவேண்டும் என மக்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

(து-36)

# திடீர் பஸ் வேலை நிறுத்தத்தால் மக்கள் அவதி

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் இ.போ.ச. சாரதி ஒருவரும் நடத்துனர் ஒருவரும் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து எந்தவிதமான முன்னறிவித்தலுமின்றி மேற்கொள்ளப்பட்ட திடீர்-பஸ் வேலை நிறுத்தத்தினால் அரச ஊழியர்கள், தபாடசாலை மாணவர்கள், உட்பட பொதுமக்கள் பாரிய அசௌகரியங்களுக்குள்ளாகியுள்ளனர்.

வழமைபோல் தங்களது கடமை இடங்களுக்கும் பாடசாலைகளுக்கும் செல்வதற்காக பஸ்தரிப்பிடங்களில் காத்து நின்ற அரச ஊழியர்களும், பாடசாலை மாணவர்களும் பஸ் ஓடாததனால் தத்தம் வீடுகளுக்குத் திரும்பிச் செல்வோரை குடாநாட்டின் பல பாகங்களிலும் காணக்கூடியதாக இருந்தது.

(து-133)

# ஆன்மீகச் சொற்பொழிவு

புலோலி ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக் கிழமை தோறும் நடைபெற்றுவதும் ஆன்மீக சொற்பொழிவுத்தொடரில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பகல் 10 மணிக்குப்பூசை முடிவுற்றதும் "கார்வண்ணம் அங்கே கண்டேன்" கைவண்ணம் இங்கே கண்டேன் என்றும் விடயம் பற்றி ஆசிரியர் ப. செல்வவிநாயகம் ஆன்மீகச் சொற்பொழிவு நிகழ்ந்தவுள்ளார்.

(கு-35)

# கிராமசேவகர்களுக்கான மாதாந்தப்படியை தொடர்ந்தும் வழங்குவதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

கடல் கொந்தளிப்புக்குக் காரணமான பிரதேசங்களில் அனர்த்தங்களுக்குள்ளான மக்களுக்குத் தேவையான வீடுகள் நிர்மாணிக்கும் அடிப்படைப் பணிகளில் ஈடுபடுதல், நிவாரணப் பணிகளுக்கு ஏற்புடைய புள்ளி விபரங்களை வழங்குதல் மற்றும் அனர்த்தங்களுக்குள்ளாகிய மக்களுக்குத் தேவைப்படுகின்ற சகல விதமான நிவாரணப் பணிகளை நிறைவேற்றுதல் என்பவற்றுக்காக கிராம அலுவலர்களுக்கு மாதாந்தம் வழங்கப்பட்டு வந்த விசேட படி தொடர்ந்தும் வழங்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்குப் பொறுப்பான சிரேஷ்ட உதவிச் செயலாளர் டி.ஜூ.அனுரபிய வந்து தெரிவித்துள்ளார்.

உள்நாட்டலுவல்கள் அமைச்சில் கடந்த வெள்ளிக் கிழமை மாலை 3 மணியளவில் சிரேஷ்ட உதவிச் செயலாளரை வடக்கு-கிழக்கு மாகாண கிராம உத்தியோகஸ்த்தர்கள் சங்கத்தின் தலைவர் ப.வசந்தகுமார், செயலாளர் கே.வாமதேவன், உப செயலாளர் அ.நேசதுரை ஆகியோர்கள் சந்தித்து கடந்த 31ஆம் திகதிக்குப் பின்னர் சுனாமி வேலைக்கான கிராம உத்தியோகத்தர்களுக்குரிய விசேட கொடுப்பனவு வழங்கப்படாதமை குறித்து நடத்திய பேச்சுவார்த்தையின் போது சிரேஷ்ட உதவிச் செயலாளர் மேற்கண்டவாறு கூறினார்.

உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரின் தா. 8/4 309 302/31 ஆம் இலக்க 2005.07.27 ஆம் திகதிக்கு கடிதத்தின் படி 2005.12.31ஆம் திகதிக்குப் பின்னர் இக்கொடுப்பனவு வழங்கப்படாதமையினால் கவலையுடன் கிராம உத்தியோகத்தர்கள் தொடர்ந்து தமது பணியை மக்களுக்கு வழங்கி வருவதாகவும் பிரதேச செயலாளர்கள் மாவட்டச் செயலாளர்களுக்கும் இது சம்பந்தமாக அறிவித்துள்ளதாகவும் வட -கிழக்கு மாகாண தொழிற்சங்கத்தினர் தெரிவித்தனர்.

விடயங்களை விபரமாகக் கேட்டறிந்த உதவிச் செயலாளர் உடன் தொலைபேசி மூலம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டார் நிதி அமைச்சிலிருந்து இதற்கான அனுமதி வருவதிலேயே காலதாமதம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(கு-7)

# மஹா கும்பாபிஷேகம்

(அராலி)

அராலி மத்தி ஊரத்தி ஸ்ரீ பேச்சி அம்மன் நூதன பிரதஸ்பா மஹா கும்பாபிஷேகம் இன்று வியாழக்கிழமை காலை 10.45 மணிக்கு நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேக பிரதம குருவாக பிரதிஸ்டா திலகம் கிரியா பூஷணம் ஆகம வித்தகர் கிருஷ்ணமூர்த்தி குருக்கள் கலந்து கொள்ளவுள்ளார்.

(கு-49)



# சாயி அருளமுதம்

முத்தியென்ற மாளிகையை அடைவதற்கு சரணாகதயே பிரதான வாயிலாகும். அதற்கு நான்கு மாடிகளுண்டு- தியானம், கர்மம், பக்தி, ஞானம் என்பவையே அவை. ஒவ்வொரு மாடியும் கீழேயுள்ள மாட்டியில் தங்கிருக்கிறது. கீழேயுள்ள மூன்று மாடிகளையும் ஏறிக்கடக்காமல் நான்காவது மாடியை அடையமுடியாது யோகங்களில் ஒன்றுக்கொன்றுள்ள ஒப்புயர்வு பற்றி மக்கள வவாதிக்கும் பொழுது அத்யாத்மிக உலகில் தம்மை 'இது' அல்லது 'அது' எனத்தமக்குத் தாமே அவர்களை முத்திரை குத்திக் கொளளும் பொழுது இதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள்.

# பல்கலைக்கழக புகுமுக மாணவர்கள் புரட்சிகரமாக மாறவேண்டும்

## இளம்பரிதி தெரிவிப்பு



(கிளிநொச்சி)

பல்கலைக்கழகத்தின் புதுமுக மாணவர்கள் புரட்சிகரமான மாணவர்களாக உருவாக வேண்டுமென்று யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இள்ம்பரிதி அழைப்பு விடுத்துள்ளார்.

யாழ்.வடமராட்சி வத்திராயனில் உள்ள மருதங்கேணி இந்து தமிழ் வித்தியாலயத்தில் பல்கலைக்கழக புகுமுக மாணவர் சிறப்பு நிகழ்வு கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

இதன்போது உரையாற்றியபோதே இளம்பரிதி இதனைத் தெரிவித்தார். பல்கலைக்கழ மாணவர்கள் ஆகிய நீங்களும் எங்களுடைய வளர்ச்சிக்கு பெரிதும் உதவி, புகுமுக மாணவர்களாக இல்லாமல் புரட்சிகர மாணவர்களாக இருத்தல் வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் உள்ள இராணுவத்தினர் குழப்பத்திலும் நடுக்கத்திலும் உள்ளனர். நாங்கள் தெளிவாக இருக்கிறோம்.

2005 ஆம் ஆண்டு தேசியத்தலைவரின் மாவீரர் நாள் உரையின்போது தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அரசாங்கம் ஏற்காத நிலையில் நாம் போராடியே அந்த உரிமையைப் பெற்றுக்கொள்ளவேண்டி வரும் எனக்குறிப்பிட்டிருந்தார்.

அதனை இந்த ஆண்டில் நாங்கள் செய்ய வேண்டியுள்ளது. ராஜபக்ஷ அரசும் இதையே விரும்புகிறது.

உலகிலேயே எந்த விடுதலை அமைப்பும் பேச்சின் மூலம் விடுதலை பெற்றதில்லை. போராடித்தான் விடுதலையைப் பெற்றுள்ளனர்.

தமிழீழத்தில் 70 வீதமான நிலத்தைப் பிடித்துள்ள நாம் நம்பிக்கை கொண்ட தலைவரின் வழியில் நின்று மிகுதி நிலத்தையும் மீட்டு, எமக்கென்றொரு தமிழீழ அரசை அமைத்து சிறந்த பல்கலைக்கழகங்களையும் உருவாக்கி எமது இனத்திற்கு பெருமை தரக்கூடிய கல்விமான்களையும் உருவாக்க வேண்டும். ஆகவே வீரம் செறிந்த புனிதமான தேசிய ரீதியான இந்த இடத்தில் புகுமுக மாணவர் களாகிய நீங்கள் புரட்சிகரமான மாணவர்களாக வரவேண்டுமென்றார் சி.இளம்பரிதி. (ச-5)

## நீர்வேலியில் இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி தெற்கு நீர்வேலியைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் சந்தேகத்தின் பேரில் படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இராஜகோபால் கஜரூபன் (வயது 19) என்ற இளைஞனை கடந்த 6 ஆம் திகதி இரவு 8.45 மணிக்கு ஊரெழு படைமுகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் அவரது வீட்டிற்குச் சென்று கைதுசெய்துள்ளனர்.

இச் சம்பவத்தையடுத்து அவரது தந்தை இராஜகோபால் மனித உரிமை ஆணைக் குழுவில் கடந்த 7 ஆம் திகதி முறையிட்டுள்ளார்.

படையினரால் கைது செய்யப்பட்ட இளைஞன் கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு பின் கொழும்பு புலனாய்வுத்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இது குறித்து மனித உரிமைகள் ஆணைக் குழுவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ச-15,133)

# இரத்மலானைப் பகுதியில் 30 தமிழர்கள் கைது

(கொழும்பு)

இரத்மலானை விமானப்படை முகாம் அமைந்துள்ள பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போது சந்தேகத்தின் பேரில் 30 தமிழர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் 27 ஆண்களும் 3 பெண்களும் அடங்குவர். இரத்மலானை விமானப்படை முகாம் அமைந்துள்ள பிரதேசத்தைச் சூழவுள்ள பொருபனை மற்றும் அப்பிலவத்தை ஆகிய இடங்களில் இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து நடத்திய சோதனை நடவடிக்கைகளின் போது 30 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

30 தமிழர்களிடமும் விசாரணை நடத்துவதற்காக கொழும்பு பயங்கரவாத தடுப்புப்பிரிவினரின் உதவியும் பெறப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. (ச-5)

# ஐ.தே.கட்சியினரை தம் வசப்படுத்த அமைச்சர்களை ஓரங்கட்டும் மகிந்த

## கொழும்புத் தகவல்கள் தெரிவிப்பு

சிறிலங்கா சுதந்திரக்கட்சித் தலைவராக மகிந்த ராஜபக்ஷ பொறுப்பேற்றதை விரும்பாத அமைச்சர்கள் மங்கள சமரவீர மற்றும் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே ஆகியோரை ஓரங்கட்டும் முயற்சிகளில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேற்கொண்டு வருவதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மகிந்தவின் கண்டி இல்லத்தில் கடந்த சனிக்கிழமை அவரது சகோதரர் பசில் ராஜபக்ஷ மகிந்தவின் ஒருங்கிணைப்புச் செயலாளர் சஜின் வாஸ் குணவர்த்தன ஆகியோருடன் மகிந்த ஆலோசனை நடத்தினார்.

இச் சந்திப்பில் சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன, ஐக்கிய மக்கள் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சுசில் பிறேமஜெயந்த ஆகியோரும் கலந்து கொண்டனர்.

அப்போது மங்கள சமரவீரவை தொடர்பு கொள்ள மகிந்த ராஜபக்ஷ பல முறை முயற்சித்திருக்கிறார்.

கடைசியாக காலியில் மங்கள சமரவீர இருப்பதை அறிந்து 'உடனே இங்கு வரவேண்டும் உலங்கு வானூர்தி அனுப்புகிறேன்' என்று கூறியுள்ளார்.

அதேபோல் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயையும் அவசரமாக மகிந்த அழைத்துள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியில் இருந்து அரசாங்கப் பக்கம் தாவுவோருக்கு அமைச்சுப்பொறுப்புக்கள் வழங்க வேண்டியிருப்பதால் துறைமுகம், விமானம் மற்றும் வெளிவிவகார அமைச்சுப் பொறுப்புக்களை வைத்திருக்கும் நீங்கள் உங்கள் அமைச்சுக்களை விட்டுத் தரவேண்டுமென்று மங்களவிடம் மகிந்த கேட்டுள்ளார்.

அமைச்சுப்பொறுப்பை நீங்கள் விட்டுக் கொடுத்தால் தான் ஐக்கிய தேசியக்கட்சியினரை இணைத்துக் கொள்ள முடியுமென்று மகிந்த கேட்க மங்கள சமரவீர அதிர்ந்து விட்டதாகவும் ஆனால் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே ஒப்புக் கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

# நான்கு கோரிக்கைகளுக்காக அரைமணி நேர பணிப்புறக்கணிப்பு

'நீதி மன்றங்களில் இருந்து கணக்காளர்களை உடனடியாக நீக்குதல், நீதி மன்றங்களின் சுயாதீனத்தைப் பாதுகாத்தல், அட்டவணைப் படுத்தப்பட்ட சேவையை பாதுகாத்தல், முன்னர் இருந்தவாறு நீதிமன்றங்களின் கணக்கு நடவடிக்கையை மேல் நீதிமன்றப் பதிவாளரிடம் ஒப்படைத்தல்' ஆகிய நான்கு கோரிக்கைகளை முன்வைத்து நேற்றுப் பகல் 12.30 மணியளவில் யாழ். மாவட்ட நீதிமன்ற ஊழியர்கள், நீதி மன்றத்திற்கு முன்பாக அரை மணிநேர பணிப்புறக் கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். (து-133)

# விடுதலைப்புலிகளுக்கு எதிராக யூனில் முறைப்பாடுகள் இல்லை -கண்காணிப்புக்குழுப் பேச்சாளர்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுக்கு எதிராக யூன் மாதத்தில் எதுவித முறைப்பாடும் பதிவாகவில்லை என்று இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் தொர்பின்னூர் ஓமர்சன் கூறியதாவது, கடந்த யூன் மாதம் அரசாங்கத்திற்கு எதிராக ஐந்து யுத்த நிறுத்த மீறல் முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

அவற்றில் மூன்று யுத்த நிறுத்த மீறல்கள். ஆனால் விடுதலைப்புலிகளுக்கு எதிராக எதுவித முறைப்பாடுகளும் பதிவாகவில்லை. என அவர் தெரிவித்தார். (ச-5)

## இ.போ.ச.பணியாளர்களின்...

முகாமையாளருடன் தொடர்பு கொண்டு முயற்சிகளை மேற்கொண் டார்.

நண்பகல் 12 மணியளவில் ஹெலி மூலம் பருத்தித்துறை இராணுவ முகாமிற்கு வந்திறங்கிய பொறுப்பதிகாரி பின்னர் இராணுவ கவச வாகனத்தில் 12.15 மணியளவில் பருத்தித்துறை சாலைக்குச் சென்று முகாமையாளர் இ.யோகநாதன், யாழ்.பொதுமுகாமையாளர் எஸ்.கணேசபிள்ளை ஆகியோருடன் பேச்சுக்களை நடாத்தினார்.

அத்துடன் இடம் பெற்ற சம்பவம் குறித்து மன்னிப்புக்கோரியதுடன் இவ்வாறான சம்பவங்கள் இனி வரும் நாட்களில் தமது பகுதியான தென்மராட்சியில் இடம் பெறமாட்டாது எனவும் உறுதியளித்தார்.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய தமது சிப்பாய்க்கு ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.

இதனையடுத்து மாலை 5 மணிக்குப் பின் சேவைகள் வழமைக்குத் திரும்பின. யாழ்ப்பாணம், கொடிகாமம், வட்டுக்கோட்டைப் பேருந்துகளை சேவையில் ஈடுபட சாலை முகாமையாளர் ஒழுங்குகளை மேற்கொண்டார்.

இதேவேளை நேற்று முன்தினம் தாக்குதலுக்குள்ளானவர்களில் சாரதியான பொ. சிவராசா (வயது 49) நெஞ்சுவலி, உடல் நோவு காரணமாக நேற்று அதிகாலை பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

இது இவ்வாறு இருக்க கடந்த 2ஆம் திகதி கொக்குவிலில் வைத்து சாரதி இராணுவத்தால் தாக்கப்பட்டதும் பின்னர் அது குறித்து யாழ்.மாவட்ட பிரதம சிவில் இணைப்பதிகாரி கேணல் பெரேரா வருத்தம் தெரிவித்ததும் தெரிந்ததே. (து-133,101,15)

## உடுப்பிட்டியில்...

கொண்டு சென்று பின்னர் மேலதிக சிகிச்சைக்காக பலாலி கொண்டு சென்றுள்ளனர்.

இச் சம்பவத்தையடுத்து ரோந்து சென்ற படையினர் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர். அத்துடன் தேடுதல் நடவடிக்கையும் இடம் பெற்றது. (ச-15,101,132)

## தயா மாஸ்டருக்கு...

விடுதலைப்புலிகளின் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

மேலும் இதனை நல்லெண்ண நடவடிக்கையாக இலங்கை அரசாங்கம் இதற்கு உதவியதாக அர சாங்க சமாதான செயலக பணிப்பாளர் பாலிதகோகன்ன தெரிவித்துள்ளார். (ச-5)

## வெடிகுண்டு...

இராணுவ அதிகாரிகள் பயணிக்கும் வாகனங்கள் மீது இந்த மோட் டார் சைக்கிள்கள் மூலம் தாக்குதல் நடத் துவதற்கு திட்டமிட்டிருப்பதாக தெரியவந்துள் ளது.

மேஜர் ஜெனரல் பரமி குலதுங்கவை படுகொலை செய்வதற்கும் வெடிகுண்டு மோட்டார் சைக்கிளே பயன்படுத்தப்பட்டது.

இந்தத் தாக்குதல் வெற்றிகரமாக அமைந்ததால் இனி மேற்கொள்ளப்படவுள்ள தாக்குதல்களிலும் வெடி குண்டு மோட்டார் சைக்கிள்கள் பயன்படுத்துவதற்கு திட்டம் இருப்பதாக பாதுகாப்பு புலனாய்வுப்பிரிவு வட்டாரத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இதுவரை கிடைக்கப்பெற்றுள்ள தவலுக்கமைய கொழும்பிற்கு கொண்டு வரப்பட்டுள்ள அவை இரகசிய இடங்களில் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் இனிவரும் தாக்குதல்களில் அவற்றை பயன்படுத்த திட்டமிடப்பட்டிருப்பதாகவும் தெரியவந்துள்ளதாக பாதுகாப்புத் தரப்பினர் தெரிவித்துள்ளனர் என அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## இளைஞர்கள்...

பெற்றோர் முறைப்பாட்டை யடுத்து யாழ். மனித உரிமை ஆணைக்குழு வின் இணைப்பதிகாரி சுவேந்திரராஜா பலாலி தலைமைக் காரியாலயத்துடன் தொடர்பு கொண்டு உரையாடிய பின்னர் இவ்விரு வரும் விடுதலை செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (ச-133)

## கொழும்பை பாதுகாக்கவென...

தலைநகர் கொழும்பின் பாதுகாப்பினை உறுதி செய்ய ஆரம்பிக்கப்பட்ட இராணுவத்தின் தொண்டர் படைப்பிரிவில் சேர்க்கப்படும் படை வீரர்கள் கொழும்பு நகரிலேயே பாதுகாப்புக்கடமைகளில் ஈடுபடுத்தப்படுவர்.

தற்கொலைத் தாக்குதல்களில் இருந்து தப்புவது தொடர்பாக இவர்களுக்கு விசேட பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

முதல் நாள் அன்றே சுமார் 250 இற்கும் மேற்பட்டவர்கள் இந்த புதிய படைப்பிரிவில் தம்மை இணைத்துக் கொண்டு விட்டனர்.

இவர்கள் வழமையான ஆட்சேர்ப்பு நடைமுறையின் கீழ் உள்வாங்கப்படும் அதே வேளை ஏனைய படைவீரர்களுக்கு வழங்கப்படும் அனைத்து சலுகைகளும் வசதிகளும் இவர்களுக்கு வழங்கப்படும் என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் 12 வருட சேவையின் பின்னர் படையில் இருந்து விலகிக்கொண்டவர்களும் 45 வயதிற்கு உட்பட்டவர்களும் மீண்டும் இந்த புதிய படைப்பிரிவில் தம்மை இணைத்துக் கொண்டு சேவையினைத் தொடரலாம் என்றும் அவர் தெரிவித்தார். (ச-5)




இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில 13.07.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.